# அருளமுதம்

# மட்டக்களப்பு ஆனைப்பந்தி விநாயகராலய

# கும்பாபிஷேக மலர்

University of Jaffna
234.4
ARU
188873(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளமுதம்

மட்டக்களப்பு ஆனைப்பந்தி

## விநாயகராலய

## கும்பாபிஷேக மலர்



iversity of Jaffna
234.4
ARU
88873(AR; Main)

Donated by-

ஆசிரியர் : சி. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணிமாத வெளியீடாகிய இந்த ஆன்மீக மலரை
எனது மதிப்புக்குரியவரும்,
என்மீது பேரன்பு பூண்டவருமான
அமரர்
**சிவமணி, சேர். கந்தையா வைத்தியநாதன்**
அவர்களின் ஞாபகார்த்தமாக
மட்டக்களப்பு ஆனைப்பந்தியில்
கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்
சித்திவிநாயகப் பெருமான்
செல்வத் திருவடிகளில்
அப்பெருமானரது கும்பாபிஷேக
சிறப்பு மலராகச்
சமர்ப்பிக்கின்றேன்.

ஆசிரியர்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

---

மட்டக்களப்பு ஆனைப்பந்தி
சித்திவிநாயகப் பெருமான்
கும்பாபிஷேக வைபவத்தை ஒட்டி
(8-9-65) முதல் (17-9-65) வரை
அருளமுத ஆசிரியர்
முத்தமிழ்மணி
சி. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்களது
**கதாகாலக்ஷேபம்**
தினசரி நடைபெறத் திருவருள் பாலித்துளது.

செயலாளர்
கந்தகோட்டம், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருளமுதம்

மட்டக்களப்பு ஆனைப்பந்தி விநாயகர்கும்பாபிஷேக மலர்

| அருள் 1 | ஆவணி 1965 | அமுதம் 10 |
|---|---|---|

## அமுதத்தில்

1. ஆனைப்பந்தி. சித்தி விக்னேஸ்வரப் பதிகம்
2. சமர்ப்பணம்
3. சிவமணி, சேர். கந்தையா வைத்தியநாதன்
4. விநாயகர் அகவல்
5. அப்பர் வாழ்வில் அஞ்சாமை
6. மட்டுநகர் ஆனைப்பந்தி ஸ்ரீ சித்திவிநாயகர் பதிகத்திலிருந்து.
7. மட்டுநகர் ஆனைப்பந்தி ஸ்ரீ சித்திவிநாயகர் மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்.
8. மணிவாசகர் சிவநெறி
9. ஆனைப்பந்தி அருட்கடல்
10. இம்மாதம் ஆசிரியர் பங்குபற்றிய நிகழ்ச்சிகள்
11. விழித்தெழுந்தேன்
12. கனியும் கன்னியும்
13. நல்லூர் தேவஸ்தான வித்துவானுக்கு தேவஸ்தான மரியாதை
14. சிதானந்தர் திருவடிகள் வணங்குவாம்
15. மட்டக்களப்பு தெய்வநெறிக்கழகத்தினர் சுவாமி ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி மகராஜ் அ[...] மகிழ்ந்தளித்த வரவேற்புப்பாமாலை
16. சிதானந்தஜீ உலகுக்கு விடுத்த செய்தி

★ அருளமுதம் நவராத்திரி அனுபந்த[ம்]

17. நவராத்திரி அனுபந்தம்
18. நவராத்திரி (பாடல்கள்)

1. நாமாவளி
2. தேவியின் திருநாம அர்ச்சனை (108)
3. எங்கும் சக்தி
4. தேவி துதி
5. இலக்குமி துதி
6. சகலகலாவல்லிமாலை
7. சரஸ்வதி துதி
8. சரஸ்வதியந்தாதி
9. சரஸ்வதி சிந்தனை
10. நாமாவளிகள்
11. சக்தி அடைக்கலம்
12. விருத்தம்
13. ஜய ஜயசக்தி

265 10/ AR 2007
UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES
University of Jaffna
188873
Library
188873
188873
Donated by ... RATNAM
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியந்தீவு — ஆனைப்பந்தி
# சித்திவிக்கினேசுவரர் பதிகம்.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

மன்றலங் கொன்றைவெண் மல்லிகை முல்லை
 மருவளர் சண்பக மலர் மண மளைந்து
தென்றல் தவழ்ந்துநின் திருமுன்னர் வீசச்
 செழுந்தமிழ் மணஞ்சில மணங்கமழ் வீதி
நன்றறி வார்பலர் உறைந்திடு மானைப்
 பந்தியில் வாழ்த்தி நாச்சியார் காண
 நின்சரண் அரண்மன நிறைவெமக் கருளே!

எங்குமாய் நிறைந்தாய் அறிவுடன் திருவும்
 ஈகையும் வீரமுங் கருணையு மாகுய்
பொங்கு பூரணமே யெங்கள் காணிக்கை
 போதுமோ நினதருட் பொன்னடி மலர்க்கே
தங்குசீ ரானைப்பந்தியிற் தந்தை
 தாயரோ டடனெழுந் தருளிய திருமா
தங்கமே சித்தி விக்கினேஸ் வரனே
 தரிசனந் தந்தெமைத் தாங்கி நின்றருளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்



கிழக்கு மாகாணம், செந்தமிழும் சைவமும் சிறந்து விளங்கும் இடம். அங்கு பலபெரும் புலவர்களும், கலைஞர்களும், அம்மாகாணத்திற்குத் தனிமதிப்பு அளித்து வருகின்றனர்; அரசியலிலும் சரி, சமயத்துறையிலும் சரி, மிகவும் சிறந்து விளங்கும் மட்டுநகரிலே, ஆனைப்பந்தி விநாயகப் பெருமானுக்கு இம் மாதம் 8-ந் உ கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. நாம் கடிதம் எழுதும்போது பிள்ளையார் சுழி போடுகின்றோம். நாளும், கிழமையும் பிள்ளையார் பூஜை செய்கின்றோம். பிள்ளையார் இல்லாத ஊர் நமது நாட்டில் கிடையாது. சிவகணங்களுக்குப் பதி — கணபதி; சிவகணங்களுக்கு ஈசன் கணேசன். தந்து. அற்றவன் வி-தந்து; மலம் அற்றவன் வி—மலன்; ஆகவே நாயகன் அற்றவன் வி—நாயகன்; பிள்ளையாருக்கு முன் நின்று, நாம்நமதுசிரசில் குட்டிக்கொண்டு, தோப்புக்கரணம் போட்டால், எடுத்த காரியம், விக்கினம் இன்றி நிறைவேறும். ஆகவே, விக்கினங்களைப் போக்கும் ஈஸ்வரன் விக்கினேஸ்வரன்; எடுத்த காரியம் சித்தி பெற அருள்பவன் சித்திவிநாயகன்; பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தால் நலமென எண்ணுகின்றோம். பிள்ளையாரை வழிபட்ட பின்னரே, எந்த ஒரு சுபகாரியமும் நடைபெறுகிறது! பிள்ளையார் வழிபாட்டை எல்லோரும் செய்கின்றனர்.

தமிழில் ஓம் என்று எழுதுங்கள். அந்தவடிவமே கணபதி; கணபதி ஓங்காரவடிவம்; யானையே, தெளிவாக ஓம் என்று பிளிறும். யானை கம்பீரமான தோற்றமும், அபார உழைப்பும், திடபலமும், அறிவும் கொண்டது. தாவர உணவை உண்டு, சக்தியுடன் பொலியும் யானை முகத்தைக் கணபதிக்குத் தந்தனர் அருட்பெரியார்கள். கணபதி உருவைக் கவனியுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கால்மடித்து அமர்ந்தகோலம் அ கரம்போலும், தலையும் துதிக்கையும் உ கரம்போலும், வயிறு ம கரம் போலும், அகர, உகர, மகர ஓங்கார வடிவமே கணபதி வடிவமானது; குண்டலினி சக்தியே மூஷிகம் — பாசத்தை யறுக்கும் பாசாங் குசமும் பதியறிவைத் துலக்கும், கொம்பெழுத்தாணியும், சகல லோகமும் ஈஸ்வரசக்தியில் அடக்கம் என்பதை விளக்கும் மோதகமும், சாதனத்திற் சிறந்த ஜபயோகத்தைக் காட்டும் ஜபமாலையும். கணபதி கையில் காண்கின்றோம். பரம்பொருள் ஒன்றே; அவர் அனந்தகுண சின்மயர்; அதன் குணங்களுக்கே பல பெயர்வடிவுகளைத் தந்து உபாசிக்கின்றோம்; லிங்கம், அந்தராத்ம வடிவம்; நடராஜமூர்த்தி ஐந்தொழில் வடிவம்: முருகன் சிவக்கனல் வடிவம்: தக்ஷிணாமூர்த்தி, மோனஞான போத வடிவம். அவ்வாறு கணபதி இறைவனின் வல்லமை வடிவம்,

''தனதடி வழிபடும் அவரிடர் கடி
கணபதி வர அருளினன்''

அசுரபலத்தை அழிக்கவந்தவன் ஆனைமுகன். ஒளவையார் கணபதி உபாசனையால் சக்தியும் முத்தியும் அடைந்தார்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

ஆகவே ஆனைப்பந்தியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆனைமுகப்பெருமானுக்குக் குடமுழுக்கு நடைபெறும் நன்னாளில் அப்பெருமானாரது அருளமுத வாரியில்; திளைத்து அவன் திருவடித் தாமரைகளில், இம்மாத அருளமுதத்தை அவன் ஞானமுதம் ஊற்றெடுக்கப் பக்தி விநயத்துடன் அப்பெருமானாரது கும்பாபிஷேக மலராகச் சமர்ப்பிக்கின்றேன்.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

## சிவமணி ★ ● ★

## சேர். கந்தையா வைத்தியநாதன்

பூராடம் என்றால் ஊராடும் என்பது அக்காலத்து முதுமொழி. சிவபதமடைந்த சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் நக்ஷத்திரம் பூராடம். எனது ஜென்ம நக்ஷத்திரம் பூராடம் என்று அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கும் போது கூறினேன்; அவ்வமயமே, தனக்கும் அதே நக்ஷத்திரம் என்பதை அவர்கள் தெரிவித்தார்கள்; அதுமாத்திரம் அல்லாது வாழ்க்கையில் எனக்கும் அவர்கட்கும் இன்னொரு ஒற்றுமை இருந்ததையும் அவர்கள் மூலமே அறிந்தேன். என் பெற்றோர்கள், வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானுக்கு, என்னைக் குழந்தைப் பருவத்தில் விற்று, அடிமைச் சாசனம் செய்ததைக் கூறியபோது, சேர். (Sir) அவர்கள், அதே வண்ணை வைத்தீஸ்வரப் பெருமானுக்குத் தன்னையும், சிறு குழந்தையாயிருக்கும் போது தன் பெற்றோர்கள் விற்று, அந்த ஞாபகமாகவே வைத்தியநாதன், என்று நாமகரணம் செய்தனர் என்றும் கூறினர்.

சிவமணி அவர்கள், சிறந்த பக்தர்; அன்று அருள் வாதவூரரின் அடிச்சுவட்டில், இன்று வாழ்ந்து காட்டியவர்கள். வாதவூரடிகள் அமைச்சராயிருந்தபோது கண்ணும் இடு கவசமும்போல் காரியம் பார்த்து ஒழுகினார், என்பது போல் வைத்தியநாதனையா அவர்களும், அரசியலில் சிறந்த சேவைபுரிந்து சிறந்த அமைச்சராகித் திகழ்ந்தனர். வாதவூரடிகளை திருப்பெருந்துறையுறை சிவபெருமான் தனது தொண்டனுக்கியதுபோல், வைத்தியநாதன் ஐயா அவர்களைத் திருக்கேதீஸ்வரப் பெருமான் தனது தொண்டனுக்கினார், வாதவூரடிகள் இம்மையாசையையும், மறுமையிலாசையையும் இகந்து செம்மையாகிய மனத்தராய் சிவகதி சேர்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததுபோல் வைத்தியநாதன் ஐயாவும், அரசியல்துறவு பூண்டு கேதீஸ்வரப் பெருமானிடம் உடல் பொருள் ஆவி அனைத்தும் அர்ப்பணித்து வாழ்ந்தார்.

அன்பர்களால் ஆசையுடன் "சேர்" (Sir) என்று அழைக்கப்படும் சிவமணி, இன்று கேதீஸ்வரப் பெருமான் திருவடிகளை அடைந்துவிட்டனர். நாவலர் கண்ட கனவை ஓரளவு நனவாக்கியவர்; புவிவாழ்வு சதமல்ல என்று கேதீஸ்வரப் பெருமான் அருகே கொட்டில் அமைந்துத் தவவாழ்வு மேற்கொண்டார்; அஞ்சா நெஞ்சமும், உறுதியும், பொறுதியும், ஒருங்கமைந்த சிவமணி இன்று சிவபதமடைந்துவிட்டனர்; அவரது ஆத்மா சாந்தியடையக் கேதீஸ்வரப் பெருமான் திருவடிகளை வழுத்துகின்றேன்.

— பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பணிவான் திருக்
கேதீச்சரத்தானே.

சாந்தி — சாந்தி — சாந்தி

உத்தம தருமம்:

பூர்வீக காலத்திலே ஈசுரானுக்கிரகம் பெற்ற பெரியோர்களாலே செய்யப்பட்ட தேவாலயங்களுள்ளும் புண்ணிய தீர்த்தங்களுள்ளும் கிலமாயுள்ளவைகளை முன்போலச் செய்வித்தல் வேண்டும். அப்படிச் செய்தவர் பெறும் பயன், முன் அவைகளைச் செய்தவர் பெற்ற பயனிலும், ஆயிரமடங்கதிகமாம். அத்தேவாலய முதலியவைகளுள்ளே பழுதடைந்த இடங்களைப் பழுதறப்புதுக்குவித்தல் வேண்டும். அப்படிப் புதுக்குவித்தவர் பெறும் பயன், அவைகளை முன்செய்தவர் பெற்ற பயனிலும் நூறுமடங்கதிகமாம்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

கணபதி துணை

# விநாயகரகவல்

சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச்சிலம்பு பலவிசைபாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வண்ணமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்

நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந்தருளி
மாயப்பிறவி மயக்கமறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென்னுளந்தனிற்புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டி யென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன்றன்னை யடக்குமுபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கருளி
கருவிகளொடுங்குங் கருத்தினையறிவித்
திருவினைதன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறுதாரத் தங்குச நிலையும்
பேறு நிறுத்திப் பேச்சுரையறுத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழுபாம்பி னாவிலுணர்த்திக்

குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே

அமுதநிலையும் ஆதித் தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்

சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்ஷமமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்

கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை யறிவித் தெனக் கருள்செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து

வாக்கு மனமும் இல்லாமனோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள்வெளியிரண்டுங் கொன்றிடமென்ன
அருடருமானந்தத் தழுத்தி யென்செவியில்

எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி

அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன்கூட்டி

அஞ்சக் கரத்தின் அரும் பொருடன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறிவித்துத்து
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

முற்றிற்று.

— ஔவையார் அருளிச் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் வாழ்வில் அஞ்சாமை

திருமதி, கங்கேஸ்வரி கந்தையா
[ செயலாளர், இந்துமகளிர்மன்றம், மட்டக்களப்பு. ]

'அருளமுதம்' மட்டக்களப்பு ஆனைப்பந்தி சித்தி விக்கினேஸ்வரர் ஆலய மகாகும்பாபிஷேகமலராக இம் முறை வெளிவருதல் மிக்க மகிழ்ச்சிக்குரியதே. ஆனைப் பந்தியானது திருவருளில் திளைத்துவாழும் இப்பகுதி மக் கள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற் சரியம் ஆகிய உட்பகைகளுக்கும், அவற்றின் வெளிப் பாட்டினுல் தோன்றுகின்ற புறப் பகைகளுக்கும் அஞ் சாது, நற்பயன்பெற்று வாழுகின்ற நிகழ்ச்சிகள் பல வற்றைப் பலருமறிவர். இச்சந்தர்ப்பத்தில் இறைவ னது அடியார்களின் அஞ்சாமைக்குக் காரணமான பேர ருளின் திறத்தை நினைவுகூருமுகமாக, அஞ்சாமையில் வாழ்ந்துகாட்டிய அப்பர் சுவாமிகளின் சிறப்புகள் சில வற்றைப்பற்றி இங்கு எழுதலாமென்று எண்ணுகின் றேன்.

"திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட
திருநாவுக்கரையன்தன் அடியார்க்குமடியேன்"

எனச் சுந்தரரால் போற்றப்பட்டவரும், நீண்டகாலம் நிலவுலகில் வாழ்ந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ நமக்கு வழிவகுத்துத் தந்தவருமான பெரியார் திரு நாவுக்கரசர் ஆவர். இவர் சைவசமயகுரவர் நால் வருள் சம்பந்தப்பெருமானுரால் 'அப்பரே' என அழைக்கும் பேறுபெற்றவர். அவருடைய வாழ்க்கை நமக்கு அன்புநெறியான சிவநெறியில் வாழ்வதற்கு மிகுந்த துணிவைத் தருகிறது. இவர் வாழ்ந்த காலம் கி. பி. 6-ம், 7-ம் நூற்றுண்டு. அந்நாளில் நாட்டில் சமணமும் பௌத்தமும் தலைதூக்கி நின்றன. மரு ணீக்கியார் என்னும் இயற்பெயர்கொண்டு வாழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர்சுவாமிகளது இளமைக்கால வாழ்வு, அவர் சமணரானமை, தம்பியார் உளராகவேண்டுமென வாழ்ந்த திலகவதியார்பொருட்டுச் சிவபிரானருளால் அவர் மீண்டும் சைவரானமை முதலான சம்பவங்களை நாம் நன்கறிவோம். 'கூற்றாயினவாறு' என்று தொடங்கிப் பாடலுற்ற அக்கணமே அவரைப் பீடித்திருந்த சூலைநோய் நீங்கியது. வளமிக்க பாடல்களைப் பாடியமையால் நாவுக்கரசர், வாகீசர் என்னும் பெயர்கள் நிலைபெற்றன. சைவநெறிப்பட்ட நாவுக்கரசருக்குச் சமணர்கள் கேடுசூழமுனைந்தனர். சமண அரசனுன மகேந்திரபல்லவனுடைய அழைப்பினை மறுத்து, சங்கரனது சேவடியை அடைந்துவிட்டோம் நாம். இதனுல்

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்"

என்று கூறி, அஞ்சாமையோடும் மறுக்கின்றார் அப்பரடிகள். சிவநெறி சார்ந்ததும் அப்பரிடம் அஞ்சாமை அரும்புவதைக் காண்கின்றோம். ஏழுநாட்கள் சுண்ணும்புநீற்றறையில் பூட்டிவைத்தபோதும் நஞ்சுகலந்த சோறு உண்ணக்கொடுத்தபோதும், மகிழ்ச்சியோடும் அவற்றை ஏற்று முன்னிலும் சிறந்து அன்பும் அருளும் விளங்கநின்ற நாவுக்கரசரின் தோற்றத்தில், முன்னர் அரும்பிய அஞ்சாமை போதாவதைக் காணமுடிகின்றது. சமணர்களாலோ அரசனுலோ இதை உணரமுடியவில்லை. இதனுல் மதம்பிடித்த யானையைக் கொல்லும்படி ஏவுவித்தனர். மதயானை உரிபோர்த்த சிவன் திருவடிகளை நெஞ்சிற் பதித்த அப்பர் சுவாமிகள்,

" அஞ்சுவதியாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை" எனப் பாடியதும் கொல்லவந்த மதயானை அவரை வலம்வந்து பணிந்து திரும்பிச்சென்றது. இங்கு நாவுக்கரசரிடம் அஞ்சாமை மலர்ந்து வீறுகொண்டு நிற்பதைக் காணலாகும். இவ்வளவோடமையாத சமணர்கள் பெரிதும் அச்சம்கொண்டு அவரைக் கல்லோடு கட்டிக் கடலில் தள்ளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அஞ்சினர்க்குச் சதமரணம் அவனிதனில் அஞ்சாத ஆடவர்க்கு ஒரு மரணம் " — என்பதை அறிந்த அப்பர் சுவாமிகள் இதற்கு அஞ்சினரல்லர். கல்லிற் கட்டிக் கடலிற் தள்ளினும் நல்ல துணை இதுவென எண்ணிச் சிவபிரானை நினைந்து நமச்சிவாயப் பதிகம் பாடினர். கல்லே புணையாக அக்கரை அடைந்தார். எம்பிரானை வேண்டிக்கொண்டு, ' துறவிக்கு வேந்தன் துரும்பு' என நினைந்து யாதொரு பயமுமின்றித் திரும்பவும் திருவதிகையைச் சென்று சேர்ந்தார்.

இதனை,

" தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன்சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்புநீர்பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயுமுடையார் புகுந்தனர் வீதியுள்ளே "

எனச் சேக்கிழார் அழகாகக் கூறுகின்றார். திருநாவுக்கரசரிடம் வாக்குவல்லமையோடு மன வலிமையுமிருந்தது. வாழ்விலே துணிவுபிறந்தது. அஞ்சியஞ்சிச் சாகாமல் வாழ்வதற்கு அஞ்சாமை இவருக்கு அணிகலனாயிற்று. இத்தனையும் சிவபெருமானை அன்புசெய்தமையால் இவருக்குக் கிடைத்த பேறுகளே.

உன்னத லட்சியங்களோடு வாழ்ந்த மகாபுருஷர்களைக் காடேகவும், பித்துப்பிடித்தவராக்கவும், பிச்சையெடுக்கவும் வைத்தது இவ்வுலகம் என்பதைப் புராண இதிகாசங்களிலிருந்து அறிகிறோம். வாழ்விலே நம்மை வஞ்சகம், பொறாமை, சூது முதலிய பகைப்புலங்கள் எதிர்நோக்கி நிற்கின்றன. இவற்றில் வெற்றிகண்டு வாழ உதவுகிறது சமயம். சமய ஆசாரியர்கள் நமக்கு வழிகாட்டிகளாக இருக்கின்றார்கள். நால்வர் நடந்த பாதையே நமது பாதை. இவர்களுள் அப்பர்சுவாமிகள் நன்மை தீமைகளை நன்குணர்ந்தவர். சுகதுக்கங்களை அனுபவித்து இறைவனடிசார்ந்து அஞ்சாது வாழ்ந்து காட்டியவர். இவரது அடிச்சுவட்டைப் பின்பற்றுவதால் சிவநெறி வாழ்வு செம்மைப்படும். சைவநெறி சிவத்தைப் பரவும்நெறி, அன்பே சிவம் எனக் கண்ட நெறி. சமுதாயத்தை அன்புசெய்வதோடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானை அன்புசெய்து வருதலின் அவசியத்தைப் போதிக்கிறது அப்பரின் அன்புநெறி.

"துன்பிலாத் தொண்டர்கூடித் தொழுதழுதாடிப்பாடி
அன்பலாற் பொருளுமில்லை ஐயன் ஐயாறனார்க்கே"

என்று தாமே பாடுகின்ற அப்பரடிகள், "தொண்டலால் துணையுமில்லை" எனக்கூறி, அன்பும் தொண்டும் ஆண்டவனை அடையச்செய்வன எனக் காட்டுகின்றார். காயமே கோயிலாகக் கடிமனமடிமையாக, நேயமே நெய்யும் பாலாய்க்கொண்டு பூசனை செய்தால் நினைப்பவர் மனம் கோயிலாய்க் கொள்வான் இறைவன். அப்போது சிந்தையுள் தெளிவும், தெளிவினுள் சிவமும் தோன்றக் காண்பர். இதனால் உலக வாழ்வுக்கு அஞ்சாத நிலையுண்டாகும். இது அப்பர்சுவாமிகளின் திருட்டாந்தம்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச்சகத்துளோரெலாம் எதிர்த்துநின்ற போதிலும்--அச்சமில்லை
துச்சமாக எண்ணிநம்மைத் தூறுசெய்தபோதிலும்-அச்சமில்லை
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்ற பாரதியார் பாடலை இந்த இருபதாம் நூற்றுண்டிலே சுவைத்துச் சுவைத்துப் பொருள்கூறி அஞ்சாமை தேடுகிறவர்கள் இற்றைக்கு ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அப்பரடிகள் இதே கருத்தினைப் புகுத்திப் பாடிய,

"வானந் துளங்கிலென் மண்கம்பமாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும்
மீனம்படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனமொன்றில்லா ஒருவனுக்காட்பட்ட உத்தமர்க்கே"

என்ற தேவாரப் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து வாழ்வுநெறியைச் செம்மைப்படுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பதைச் சைவசமயத்தில் வாழ்கிற ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டும். இன்னும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தப்பிவானம் தரணி கம்பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
.............................................
அப்பனுருளர் அஞ்சுவதென்னுக்கே'

என்று அப்பர் சுவாமிகள் திருவாய்மலர்ந்து, தைரியம் உண்டாக்கி அஞ்சாத வாழ்க்கைக்கு நம்மை அழைத்துச் செல்கின்றார். அவர்வழி நின்று எம்மையாளுடையார் ஒருவர்தமராய், ஒருவனுக்காட்பட்ட உத்தமராய், 'அப்பனுருளர்' என்ற அசையாத நம்பிக்கையோடு நாம் வாழ்தலே அவசியமாகின்றதென்பது நன்கு தெளிவாகின்றது.

செம்மைசான்ற நெறியான சைவசமயத்தில் வாழ்கின்ற நாமெல்லோரும் சிவபிரானுக்கு அன்பு செய்து, தேடித் தேடொணுத் தேவனை நம்முள்ளே கண்டுகொண்ட இறுமாப்பினுல்,

"மண்பாதலம்புக்கு மால்கடல் மூடி மற்றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல்நெஞ்சே"

என்ற திடசித்தம் உடையராய் அவனருள்பெற்று வாழ்வோமாக.

———

## கோயில் சொத்து

கோயிலுக்கு நியமிக்கப்பட்ட தர்மகர்த்தா, கோயில் பணத்தையும் அதிகாரத்தையும் தன்னுடையதென்று நினைப்பது பாவம்; சட்டத்திற்கு விரோதம்; கடவுள் தண்டனையும் கிடைக்கும். அதேபோல் சர்க்காரின் பணத்தையும் அதிகாரத்தையும் நிர்வகிக்கும் ஜனப் பிரதிநிதிகள், அவற்றைத் தங்களுக்குச் சொந்தமென்று நினைப்பது மகா பாவம். ஜனங்களின் தண்டனை பொல்லாதது.

— இராஜாஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுநகர் ஆனைப்பந்தி

# விநாயகர் பதிகத்திலிருந்து

*[காப்பு]*

சிந்திக்கத் தேனூறும் தீந்தமிழின் பாலூறும்
வந்திக்கும் அன்பர் மனமூறும் — தொந்திக்
கரமைந்து டையவனைக் காரானைப் பந்திவளர்
அரனைப் பெரியவனை ஆங்கு.

*[பன்னிருசீர் விருத்தம்]*

நோயில் லாத நெடுவாழ்வு
நோற்றேன் தருக, அது கொண்டு
நோன்பும் பணியும் உன்னடிக்கு
நோற்றேன் அருள்க மயலான
தீயில் நீங்கி உன்துணைத்தாள்
தேடும் புனித அடியாரைத்
தேடி அமுது புரிவிக்கத்
தீர்வில் லாத நிதிதருக
ஆயுங் கலையின் பேரறிஞர்
அன்புச் சேர்க்கை நீதருக
அடியேன் நாவில் எந்நாளும்
ஐயா உனது பெயர்வருக
கோயில் கொண்டாய் மட்டுநகர்
குலவு மானைப் பந்தி தனில்
கோல மதமா முகவரசே
கோவே வருக வருகவே!

அருளே அமுதே அன்பகமே
ஐயா மறையின் மெய்யாவே
அலைவாய் நடும்மா மணிமருகா
ஆல வாயா னருள்மகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருளை நீக்கி உன்னடியாம்
மாயா வெருளியை வெளிகாட்டி
மறுமை இம்மை மயக்கறுக்கும்
மருந்தே விருந்தே வடிவேற்கை
ஒருவன் வள்ளி தனைக்கூட
உடனே ஆனை வடிவான
ஒளியே தில்லைத் தென்பதியில்
உறையும் செல்வப் பெருமானே
மருவார் கமல வயல்சூழ்ந்த
மட்டு நகரா னைப்பந்தி
வளரும் திருவே வருகவே
மறையின் பொருளே வருகவே!

உன்னை நினைந்துன் புகழ்பாடி
உலகிற் பலபே ருய்ந்தார்கள்
உன்மத் துடையேன் உணர்வில்லேன்
ஓதேனுன்பேர் ஒருநாளும்
என்னைப் பெரிதென் றெண்ணல் அலால்
எண்ணிற் றிலனே எனை ஆண்ட
ஈசன் தந்த திருமணியை
எழிலார் ஆனைப்பந்தி வளர்
மன்னை மலையை மதமுகமா
மணியைப் பரமன் தருமகனை
மன்னும் நானும் என்னதுவும்
மடிய விலையேல் உன்னருளால்
பின்னைப் பிறவி பெற்றதனுற்
பேறென் னுற்றேன் பேரமுதே
பெம்மான் கருணை வடிவேயுன்
பேறே விழைந்தேன் வருகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுநகர் — ஆனைப்பந்தி (புளியந்தீவு)

# ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்.

---

### விநாயகர் துதி.

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

மெய்யன்புடையீர்,

ஸ்ரீ விராட் புருடனது சரீரமாகிய பிரம்மாண்டத்தின் இடைநாடிஸ்தானமென சாந்தோக்கிய உபநிடதத்திலும் சுவர்ணபூமி புண்ணிய பூமி எனத் தெக்ஷிண கைலாசமான்மியத்திலும் புகழ்பெற்றதும் சிவபூமி அனுக்ரகஸ்தலமென திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், அருணகிரிநாதர் முதலியோரால் தேவாரம் திருப்புகழ் பாடப்பெற்ற சிவஸ்தலங்களைத் தன்னகத்தே கொண்டதுமான இவ்விலங்காதுவீபத்தின் பூர்வபாகத்தில் மிக வனப்புடன் விளங்கும் மட்டுநகரில், விநாயகப்பெருமான் திருவருளால் ஆனைகள் பந்தி பந்தியாகவந்து வணங்கி அருள் பெற்ற சிறப்பினையுடையதும், புராதனமானதுமாகிய ஆனைப்பந்தி என்னும் திவ்யஸ்தலத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கும், சிவன், பார்வதி, நடராஜர், நவக்கிரகம், பைரவர் முதலிய ஏனைய மூர்த்திகட்கும், நிகழும் விசுவாவசு வருஷம் ஆவணிமீ 23-ந் உ (8-9-65) புதன் கிழமைகாலை திரயோதசி திதியும், திருவோண நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய 6 மணி 34 நிமிஷத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் வரும் சிங்கலக்ந சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்திருப்பதால், அன்பர்கள் அனைவரும் இவ்வைபவத்திலும், கீழ்க்காணும் கிரியா காலங்களிலும் வந்து தரிசித்து சித்திவிநாயகப் பெருமானின் திருவருளைப்பெற்று, இக பர நலங்களை யடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கிரியா விபரம்:

ஆவணிமீ 17-ந் உ (2-9-65) வியாழக்கிழமை காலை 7 மணி 35 நிமிஷத்தின்மேல் விநாயக வழிபாடு, ஆசாரிய வரணம், திரவியசுத்தி, திரவியவிபாகம், அனுக்ஞை முதலியன. இரவு: கிராம சாந்தி, பிரவேசபலி.

ஆவணிமீ 18-ந் உ (3-9-65) வெள்ளிக்கிழமை பகல்: ரக்ஷோக்கினஹோமம், திசாஹோமம். இரவு: வாஸ்துசாந்தி.

ஆவணிமீ 19-ந் உ (4-9-65) சனிக்கிழமை பகல்: ஆயுஷ்கர்மம், நவக்கிரகஹோமம் சூர்யாக்கினி சம்கிரஹணம். இரவு: மிருத்சங்கிரஹணம், விசேஷ சந்தி, பூதசுத்தி, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், பிரசன்னாபிஷேகம், கடஸ்தாபனம், கலாகாஷணம், யாகாரம்பம், நவாக்கினி விபசனம், நூதன மூர்த்திகட்கு தான்னியாதிவாசம், ஜலாதிவாசம், நயனோன் மீலனம், சயனாரோஹணம், கோபிரவேசம் முதலியன.



UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணிமீ 20-ந் உ (5-9-65) ஞாயிற்றுக்கிழமைகாலை 6 மணிமுதல் 7 மணிக்குள் தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரபிம்ப ஸ்தாபனம், அஷ்டபந்தனம். யாகபூஜை, வேதபாராயணம், தேவாரபாராயணம் இரவு: விசேஷ சந்தி, யாகபூஜை, ஹோமம், வேத, தேவாரபாராயணம்.

ஆவணிமீ 21-ந் உ (6-9-65) திங்கள் காலை: விசேஷ சந்தி, பூதசுத்தி, தைலாப்பியங்கம் அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல், யாகபூஜை, வேத பாராயணம், தேவாரபாராயணம் இரவு: யாகபூஜை; வேதபாராயணம், தேவாரபாராயணம்.

ஆவணிமீ 22-ந் உ (7-9-65) செவ்வாய்க்கிழமை பகல் விசேஷ சந்தி, பூதசுத்தி, யாக பூஜை, ஹோமம், வேத தேவாரபாராயணம், இரவு: விசேஷ சந்தி, யாகபூஜை. பிம்பசுத்தி, சுவாமிரக்ஷாபந்தனம், நியாசங்கள் விசேஷ திரவிய ஹோமம், ஸ்பர்சாகுதி. குருமார்களுக்கு விசேஷ பூஜை.

ஆவணிமீ 23-ந் உ (8-9-65) புதன்கிழமை உதயத்திற்குமுன் பூர்ணகுதி. ஸ்தூபி அபிஷேகம், 6-03 முதல் 6-34 க்குள்வரும் சிங்கலக்ந சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம். 8-00 மணி: தர்சனுதிகள், யஜமானபிஷேகம் மஹாபிஷேகம், விசேஷபூஜை, ஆச்சாரிய சம்பாவனை, மஹா ஆசீர்வாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேடி கிரியைகள் யாவும் சிவஸ்ரீ சு. வேதாரண்யேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும்.

பிரதிஷ்டா குருமார் :

சிவஸ்ரீ வி. வரதராஜக்குருக்கள், சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக்குருக்கள், சிவஸ்ரீ ந. சபாரத்தினக்குருக்கள், சிவஸ்ரீ இ. குமாரசாமிக்குருக்கள், சிவஸ்ரீ சி. வரதராஜக்குருக்கள், சிவஸ்ரீ ந. சோமஸ்கந்தக்குருக்கள், சிவஸ்ரீ ச. சுப்பிரமண்யக்குருக்கள், சிவஸ்ரீ கு. கணேசக்குருக்கள் சிவஸ்ரீ பொ. முத்துக்குமாரசாமிக்குருக்கள், சிவஸ்ரீ சா. விஸ்வநாதக்குருக்கள், சிவஸ்ரீ பா. பஞ்சாட்சரக்குருக்கள், சிவஸ்ரீ கருணாகரேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ சோ. நடராஜக்குருக்கள், சிவஸ்ரீ ச. தேவராஜக்குருக்கள், சிவஸ்ரீ இரத்தினசாமிக்குருக்கள், சிவஸ்ரீ ப. ஷண்முகசுந்தரக்குருக்கள், சிவஸ்ரீ கா. கு. சுப்பிரமணியக்குருக்கள், சிவஸ்ரீ சண்முகரத்தினக்குருக்கள்.

சர்வபோதகர்: கலாநிதி சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள், சர்வசாதகம்: சிவஸ்ரீ ஆத்மநாதக் குருக்கள். சிவஸ்ரீ பூ. தியாகராஜக் குருக்கள். வேதபாராயணம்: வியாகரண சிரோமணி ஸ்ரீ. ஐ. சிதாராம சாஸ்திரிகள்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபையாரும்,
கும்பாபிஷேக குழுவினரும்.

குறிப்பு : கிரியாகாலங்களில் அடியார்கள் பால், தயிர், நெய், இளநீர், கரும்பு, மலர் ஆகியவைகளைக் கொண்டுவரவும். தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறும் அபிஷேக உபயம் செய்ய விரும்புவோர்கள் காரியதரிசியுடன் தொடர்புகொள்ளவும்.

கும்பாபிஷேகதின நிகழ்ச்சிகள் இலங்கை வானொலியில் அஞ்சல் செய்யப்படும்.

---

## கற்பக விநாயகர் துதி

தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளு(ம்)
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபாற்
பொன்னோங்கன் முன்னோங்கும் பொற்பமர் கற்பகம்போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகர் சிவநெறி

புன்னாலைக்கட்டுவன்

பிரம்மஶ்ரீ சோ. குகானந்தசர்மா

சமயகுரவர் நால்வருள் மாணிக்கவாசகசுவாமிகளு மொருவராவர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திசுவாமிகள் ஆகியோர் தேவாரங்கள் பாடினரென்றால் மாணிக்கவாசகர் திருவாசகத்தைப் பாடியருளினர். இவர்கள் நால்வரும் சிவபெருமான் மீதுகொண்ட அளவற்ற பக்தியே இப்படியாக இவர் களைப் பாடச்செய்தது. திருஞானசம்பந்தர் தமது மூன்றாவது வயதிலேயே சிவபெருமானின் தரிசனத் தைப்பெற்று, அப்பெருமானுக்குத் தேவாரப் பாமாலை சூடத்தொடங்கினர். அதேபோன்று நாவுக்கரசரும், சுந்தரரும் தத்தமது பக்திநிலைக்கேற்பச் சிவபெரு மானால் ஆட்கொள்ளப்பட்டமையை அவர்களது வர லாறுகள் எடுத்துரைக்கின்றன. ஆனால் மாணிக்கவாச கர் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவிதம் வேற் றுமையுடையது. அவர் சிவபெருமான்மீது கொண் டிருந்த பக்தியானது உலகிலுள்ள சகலருக்கும் ஆன் மாக்கள் முத்திநிலையை அடைவதெப்படி என்ற வினா வுக்கு விடைபகர்வதாகவுள்ளது.

இறைவன் ஆன்மாக்களின் நிலைகளுக்கேற்பவே அருள்பாலிக்கிறான். ஆன்மாக்கள் மும்மலங்களையும் விட்டுப் பதியைநாடும்போதே இறைவனால் ஆட்கொள் ளப்படுகின்றன.

திருவாதவூரடிகள் பாண்டிநாட்டின் முதன் மந் திரியாக இருந்தவர். முதன் மந்திரிப்பதவியை வகித்த வாதவூரருக்குச் சகல சௌகரியங்களுடன்கூடிய ஆடம் பர வாழ்க்கை நடத்த முடிந்தது. அப்படியாக இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் இறைவன்பால் பக்திகொண்டிருக்கத் தவற வில்லை. இறைவனுக்கு எல்லா ஆன்மாக்களும் ஒன்றே. ஆனல் வாதவூரர் மந்திரியாக இருந்துகொண்டு தமது பாசங்களைவிடுத்து இறைவனையே நாடத்தொடங்கிய மையால் இறைவன், இவர்மீது இரக்கங்காட்டி அருள் புரிந்தார். அவர் எம்பிரான்மீது கொண்டிருந்த பக்தி நிலையையும், அவர் ஆட்கொள்ளப்பட்டமையையும் ஈண்டு நோக்குவோம்.

சிவபெருமான் எப்படிப்பட்டவர் என்பதை,

"வானாகி மண்ணாகி, வளியாகி, யொளியாகி
ஊனாகி உயிராகி, உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி, யான் என தென்று அவர் கூத்தாட்டு
வானாகி நின்றான்" என்றும்
"அனேகன் ஏகன் அணுஅணுவி லிறந்தாய்"

என்றும் விபரிக்கின்றார். அதாவது சிவபெருமான் எங்கும் உள்ளவர், எல்லாம் வல்லவர் என்பதாகும். ஆகவே சிவபெருமான் ஒப்பற்றவர். அப்படியான சகல சக்திகளையும்கொண்ட சிவபெருமானைத் தம் மிடத்தேயுள்ள ஐம்புலன்களாலேற்படும் பாசத்தினை அறுத்து அருளும்படி இவ்வாறாக வேண்டுகிறார்.

"காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய்
வேருறு வேனை விடுதி கண்டாய்" என்றும்
"ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல னால்அலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்" என்றும்
"எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்"

என்றும் பாடி இறைவனைத் தமது நிலைமையை உண ரச்சொல்லிப் பாசத்தினின்றும் விடுவித்து அருளும் படி கெஞ்சிக் கேட்கின்றார்.

வாதவூரர் பத்தி வைராக்கியம்கொண்டு பாடிய பாக்கள் அவரது பக்திநிலையை மேம்படுத்திக் காட்டு கின்றன. திருச்சதகத்திலுள்ள எல்லாப் பாடல்களுமே பக்திவைராக்கியங்கொண்டு பாடப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்தான் அரும்பிவிதிர்விதிர்த்து (உன்) விரையார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்து (உ)ன்னைப்போற்றி சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே."

எனத் திருச்சதகத்தின் முதற்பாவிலேயே சிவபெருமானை நினைந்து உருகிப் பாடியவர், இன்னுமோரிடத்தில்,

"வருந்துவன்நின் மலர்ப்பாதம் அவைகாண்பான் நாயடியேன்
........... அருளமுதம் புரியாயேல் வருந்துவன்"

என்றுரைக்கின்றார்.

ஐம்புலன்களால் ஏற்படும் கெடுதல்களை விடுவிக்க எம்பெருமானைத் தொழுத வாதவூரடிகள் ஞானிகளின் பக்திமார்க்கத்தைக் கொண்டவரல்லர். ஞானிகள் தவம் மேற்கொண்டு சிவபெருமானை நினைந்து வழிபடுவர்.

"ஒருவனே போற்றி யொப்பில் அப்பனே போற்றி' என்று சிவபெருமானைத் துதிசெய்த அடிகளார் "தவமே புரிந்திலன் என்பதிலிருந்து அவர் தவம்செய்யாமல் சாதாரண மனிதர்களைப்போலவே வழிபாடு செய்தார் என்று புலனாகின்றது. "பூசில் தாம் திருநீறே நிறையப்பூசி" என்றுரைப்பதிலிருந்து திருநீற்றின் மகிமை கூறப்படுவதை நாம் அறிந்துகொள்ளலாம்.

இவ்வாறாகப் பலவிதமாக இறைவனை வழிபட்ட வாதவூரர் எம்பெருமானைப் புகழ்ந்துபாடித் தம்மை ஆட்கொண்டருளுமாறு வேண்டுகிறார்.

"எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணினின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே" என்றும்

"மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த பொருளனே" என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்பலத் தாடும் நின்கழற் போது நாயினேன்
கூடவேண்டும் நான்போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும் நாள் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே"

என்றும் துதிசெய்துபாடி முத்திநிலையைத் தமக்குக் காட்டுமாறு வேண்டுகிறார்.

சிவபெருமானை அடைதல் எளிதன்று என்பதைத் திருவாதவூரடிகள் வாழ்க்கையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. சிவபெருமானை அவர் பலவாறு தொழுதிருக்கின்றார். திருவாசகத்தில் உள்ள ஒவ்வொரு பாடலும் மனமுருகிப் பாடப்பட்டவை. அப்படியாகத் தம்மை வழிபட்ட அடியாரைச் சிவபெருமான் தாமாகவே "ஞானகுரு"வாக வந்து ஆட்கொண்டார்.

திருவாதவூரருக்குத் திருப்பெருந்துறையில் குதிரை வாங்கச் சென்றபொழுதே உபதேசம்செய்யப்பட்டது.

அதனை அவர்,

"தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர் அருளனே"

என்கின்றார். திருப்பெருந்துறையில் சிவம், ஞானம், போதம் என்கின்ற ஒப்பற்ற அருட்சக்திநிலைகள் இறைவனால் விளக்கப்பட்டன. நரியைப் பரியாக்கியமையும், பரியை நரியாக்கியமையும், வைகை ஆற்றினைப் பெருகச்செய்து வாதவூரரின் துயரைப்போக்க வந்தியம்மையாருக்காக மண் சுமந்தமையும், பின் அடிவாங்கியமையும் வாதவூரர் தன்பால்கொண்டிருந்த பக்தியின் நிமித்தம் சிவபெருமானால் செய்யப்பட்ட அற்புதச் செயல்களேயாம். தில்லை மூவாயிரவர்பொருட்டு வாதவூரரைக்கொண்டு புத்தரை வாதத்தில் வெல்லச் செய்தமை, சிவபெருமான் "ஞானகுரு"வாக நின்றமையை உணர்த்துகிறது.

சிவபெருமானே நேரில்வந்து தம்மை ஆட்கொண்டமையை,

Donated by:-
Mr. K. C. ...RATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேடிநீ ஆண்டாய் சிவபுரத்தரசே" எனவும்
"நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி" எனவும்
"ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே"
எனவும் கூறுகிறுர் திருவாதவூரடிகள்.

திருவாசகத்தில் உள்ள ஒவ்வொரு அடியும் மணி மணியான கருத்துக்கள் கொண்டவை. இதனுல் திருவாதவூரடிகள் மாணிக்கவாசகர் என்றபெயரைப் பெற்ருர். வாதவூரன் சொல்லத் திருச்சிற்றம்பலத்தான் திருவாசகத்தை எழுதியமையிலிருந்து திருவாசகத்தின் பெருமை மேலும் உயர்வடைகின்றது. அப்படியாயின் மாணிக்கவாசகரின் பெருமை சொல்லிற்கப்பாற்பட்டதாகும்.

மாணிக்கவாசகரின் வாழ்க்கை சாதாரண மனிதரொவ்வொருவருக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அவர் அரசியலில் இருந்தபோதும் ஞானத்தைக் கொண்டிருந்தார். எனவே அவரது சிறந்த பக்தியை ஏற்று இறைவனே "ஞானகுருவாக" வந்தருளினுர். அதேபோன்று நாமும் மாணிக்கவாசகரைப் பின்பற்றிப் பிறவித் துன்பங்களினின்றும் மீண்டு எல்லையில்லா முத்தியின்பத்தைப் பெறுவோமாக.

---

## புராண படனம்

புராணம் வாசித்துப் பொருள் சொல்லற்கு யோக்கியராவார், நான்கு வருணத்துள்ளும், இலக்கணவிலக்கியங்களிலே வல்லவராய், நீதி நூல்களையும், சமயநூல்களையும் கற்றறிந்தவராய் தமிழ்வேதத்தை அத்தியயனம் பண்ணினவராய், நல்லொழுக்கத்திற் சிறந்தவராய் உள்ளவர். நல்லொழுக்கம் இல்லாதவரிடத்தே புராணங் கேட்டலாகாது. —ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனைப்பந்தி அருட்கடல்

வித்துவான், பண்டித வி. சி. கந்தையா B. O. L.

'அருளொழுகும் திருவதனம் அதுகொண்டுவாழும்
ஆனைநகர் மணிவிளக்கை அனவரதநினைவேன்'

மட்டக்களப்பின் தலைநகர் புளியந்தீவு. நாடு பெருங்காடாகஇருந்த காலத்தே புளியந்தீவில் வாழ்ந்த ஆனைகளின் உறைவிடமாயிருந்த மேட்டு நிலப்பாங்கரில் நடுநாயகமாய் விளங்கும் ஸ்ரீ சித்தி விக்கினேஸ்வரர் கோயிலே, மட்டக்களப்பு ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவிலெனப்படுவது. பல்லாண்டுகளின் பின்னர், அப்பழங் கோவிலின் கட்டிடங்கள் யாவும் இன்று பெருஞ் செலவிலே புதுக்கி அமைக்கப் பட்டுள்ளன. 8-9-65-ல் அக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. அதுபற்றி, உயர்திரு மணிபாகவதர் அவர்கள் தமது 'அருளமுத' வெளியீட்டினை ஒரு சிறப்பு மலராக வெளியிடுதல் மிகப் போற்றத்தக்க ஒரு அருட்பணியாகும்.

ஆனைப்பந்தி ஆலயத்தில் வளரும் அண்ணல், விநாயகப் பெருமான் அவன், அடியார்கள் திளைக்கும் அருட்கடலானவன். முருக வழிபாடும், சக்தி வழிபாடும் கமழும் மட்டக்களப்புத் தமிழகத்திலே காணப்படும் பழமையான ஒரு சில விநாயகர் கோவில்களில் ஆனைப்பந்தியும் சிறந்த ஒன்றாகும். நகர் நடுவண் நன்கு பரிபாலிக்கப்பட்டு விளங்கும் சிறப்பினாலும் அருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலாக விளங்கும் தலமூர்த்தியின் பெருஞ்சிறப்பினு லும் மிகப்பெரிதும் மதித்துப் போற்றப்படுவது இக் கோவில்.

இங்குள்ள விநாயகப் பெருமான் வேண்டுவார் வேண்டுவன ஈவதிற் பெயர் பெற்ற விமலன். அந்த ணர் பரவும் செந்தமிழ் அண்ணல். மறுமை இம்மை யைக் கறுக்கும் ஒரு மருந்து. பேசிச் சுவைக்க அமு தூறும் பெயரோன். அவனைப் புகழ்ந்து பாடி உய்தி பெற்றுச் சென்ற அடியார்களோ இங்கு எண்ணி லடங்கார்.

"வடிவேற்கை ஒருவன் வள்ளிதனைக் கூட உடனே ஆனைவடிவான ஒளி" என்று ஆனைப்பந்தியானது பக் தர்கள் அவனைப் பாடுகின்றார்கள், முருகன் வள்ளி நாயகியாரைக் கூடுதற்கு விரும்பியபோது, விலகிச் சென்ற அவ்வம்மையாரை, ஆனைவடிவாக எழுந்தருளி வந்து முருகன் கையிற் சேர்ப்பித்தார் விநாயகர் என்று புராணக்கதைகள் கூறுகின்றன. எங்கும் நிறைந்தவ ரான விநாயகப்பெருமானுடன் தொடர்புடைய இக் கதையிலடங்கிக் கிடக்கும் உட்பொருள் நாம் அறிந்து பயன்பெறவேண்டிய ஒன்று.

முருகனையும் வள்ளியம்மையாரையும் முறையே ஞான ஒளி அல்லது திருவருள் என்றும், பக்குவ நிலையினை அடைந்த ஆன்மாவென்றும் உருவகப்படுத் திக் கூறுகின்றார்கள். இறைவனை அடையக்கூடிய பக்குவமுற்றநிலையிலும் கூட ஆன்மா, தன்னைவிட்டு நீங்கப்பெறாத ஆணவமயக்கால் உலக ஊழலைவிட்டு விலகி நிற்றற்குத் தயங்குவதுண்டு. அவ்வேளையில் ஞானமுனைப்பானது குருவின் துணையால் ஆன்மாவை மயங்கவிடாது தடுத்துநிறுத்தித் திருவருளிற் சேர்க் கும். அந்தச் சக்திவாய்ந்த ஞானமே பிரணவம் என் பதாம். பிரணவம் ஓங்காரவடிவானது. ஓங்கார வடிவத்தினையே யானைமுகங் குறிப்பதாதலின் விநாய கப்பெருமானை "ஓங்காரத்துருவாகி' என்று பெரியோர் குறிப்பிடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சக்திகளுக்கும் இருப்பிடமானவன் சிவன். அச் சிவசக்தியானது பிரணவமாகும் தன்மையினையே 'ஓம்' என்ற ஒலி காட்டுகின்றது. கடலின் பேரிரைச் சலை நாம் தூரத்தில் நின்று கேட்டால் 'ஓம்' என்றே அது இசைத்து முடிவதை உணரலாம். மக்கட்கூட் டத்தின் பெரிய இரைச்சலும், பெருங்காற்று, நீரோட் டம், பெருநெருப்பு ஆகிய இயற்கைகளின் பேரொலி யும் எல்லாம் 'ஓம்' என்றே இசைக்கக் கேட்போம். எங்கும் நிறைந்த சிவத்தினை ஒலிவடிவாகக் காட்டு கின்ற பிரணவக் குறிப்பே அது என்பதை நாம் உணரு தல் வேண்டும். பிரணவ ஒலியின் வரிவடிவான 'ஓம்' என்பது யானைமுக அமைப்பினை ஒத்திருக்கின்றது. அத னாலேதான் ஞானியர் விநாயகப்பெருமானைப் "பிரண வத்தின் சொரூபமானவன்" என்கின்றனர்.

பிரணவம் உயிரின் இறுதிப் பயனைத் தருவது. விநாயகப்பெருமானை வழிபடுவோர் உலக இன்பத்தை யும், அதேநேரத்திலே திருவருளின்பத்தையும் ஒருங்கே பெறவல்லாராவர் என்ற பெரிய கருத்தையே விளக்கு வது வள்ளிநாயகியாரை விநாயகர் ஆனைவடிவாகி வந்து முருகன்பாற் சேர்த்தார் என்ற புராணக்கதை. இருமைப்பயனையும் இவ்வாறு ஒருங்கே ஊட்டவல்ல வர் விநாயகர் என்பதை நாம் உணருதல்வேண்டும். ஊன்றி உணர உணர அமுதூறி, உள்ளம் தெவிட்டும் அவனது ஒளிவடிவானது அருட்கடலாகி நம்மை நிறைந்த இன்பத்துள் ஆழ்த்துகின்றது. அதனாலே தான் நாமும் ஆனைப்பந்தியானை 'அருட்கடல்' என் கின்றோம். அவனது பொன்னார் திருவடிகளும், பிர ணவத்தின் பொருளார் திருமுகமும் நம்மை அருளால் நிறைத்து என்றும் வாழவைக்குமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாதம்

## ஆசிரியர் பங்குபற்றிய நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| ஆகஸ்டு | 1 உ | மாலை 6 மணி, வண்ணை சாந்தையர் மட விநாயகர் ஆலய திருப்பணி கதாகால க்ஷேபம். |
| ஆகஸ்டு | 2 | இரவு 9-15 மணி நல்லூர்க்கந்தன் உற்சவக் கந்தபுராண விரிவுரை. |
| ,, | 3 | இரவு 9-15 ,, ,, |
| ,, | 4 | ,, ,, ,, ,, |
| ,, | ,, | இரவு 11 மணி இணுவில் காரைக்காடு சிவன் கதாகாலக்ஷேபம். |
| ,, | 5 உ | இரவு 9-15 மணி நல்லூர்க் கந்தன் உற்சவ கந்தபுராண விரிவுரை. |
| ,, | 6 உ | இரவு 8 மணி கந்தரோடை விசாலாக்ஷி அம்மன் கதாகால க்ஷேபம். |
| ,, | ,, | இரவு 9-30 மணி நல்லூர்க் கந்தன் உற்சவ கந்தபுராண விரிவுரை |
| ,, | 7 உ | இரவு 9-15 மணி ,, ,, |
| ,, | 8 உ | ,, ,, ,, |
| ,, | 9 உ | ,, ,, ,, |
| ,, | 10 உ | ,, ,, ,, |
| ,, | 11 உ | ,, ,, ,, |
| ,, | 12 உ | ,, ,, ,, |
| ,, | 13 உ | ,, ,, ,, |
| ,, | 14 உ | ,, ,, ,, |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்டு 15 உ இரவு 7-30 மணி மாவிட்டபுரம் அருண கிரிநாதர் விழாவில் கதாகாலக்ஷேபம்.
இரவு 9-30 மணி நல்லூர்க்கந்தன் உற்சவ கந்தபுராண விரிவுரை

„ 16 உ „ „ „

„ 17 உ இரவு 7-30 மணி மல்லாகம் பழம் பிள்ளையார்கோயில் கதாகாலக்ஷேபம்.

„ „ „ 9-30 நல்லூர்க் கந்தன் உற்சவ கந்தபுராண விரிவுரை

„ 18 உ இரவு 9-30 மணி „

„ 19 உ „ „ „

„ 20 உ „ „ „

„ 21 உ „ „ „

„ 22 உ „ 7-30 மணி மீசாலை விநாயகராலயத்திற்கு திரு. தா. பொன்னம்பலம் அவர்கள் ஆசிரியருக்காகக் கதாகாலக்ஷேபம் செய்தார்.

„ „ இரவு 9-00 நல்லூர்க் கந்தன் உற்சவ கந்தப்புராண விரிவுரை
இரவு 11 மணி அளவெட்டி காத்தவராயர் கோயிலில் தவில் வித்துவான் தக்ஷிணாமூர்த்தி அவர்களது உபயத்தில் கதாகாலக்ஷேபம்.

„ 23 உ இரவு 9-30 மணி நல்லூர்க்கந்தன் உற்சவ கந்தபுராண விரிவுரை

„ 24 உ இரவு 9-30 „ „

„ 25 உ „ „ „ „

„ 26 உ இரவு 10 மணி நல்லூர்க்கந்தன் உற்சவ கந்தப்புராண விரிவுரைப் பூர்த்திவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்டு 27 உ இரவு நல்லூர்க்கந்தன் உற்சவச் சமய அறிவுப் போட்டிப் பரிசு வழங்கல்

„ 28 உ நல்லூர்க்கந்தன் வயிரவர்மடை.

„ 29 உ மாலை 6-30 மணி மானிப்பாய் வேலக்கைப்பிள்ளையார் கோயிலில் சமயகுரவர் பிரதிஷ்டையில் கதாகாலக்ஷேபம் இரவு 8-30 மணி நவாலிப் பிள்ளையார் ஆலயத்தில் கதாகாலக்ஷேபம்,

இரவு 10 மணி மலைநாடு பிரயாணம் நல்லைக்கந்தன் ஆலயத்திலிருந்து மேற்கொள்ளல்.

„ 30 உ காலை 6.30 மணி மாத்தளை திரு. K. குமாரஸ்வாமி அவர்களது இல்லத்தில் விநாயக சதுர்த்தி விசேஷ பூஜை

„ „ மாலை 6-30 மணி நோட்டன் பிறிட்ஜ் விநாயகராலயத்தில் கதாகாலக்ஷேபம்.

„ 31 உ மாலை 6 மணி மஸ்கேலியா ஷண்முகநாதர் ஆலயத்தில் கதாகாலக்ஷேபம்.

———

### மகான்கள் சுபாவம்.

"அடர்த்தியான ஆலமரம் மக்களுக்குக் குளுமையையும் நிழலையும் தருகிறது. ஆனால், தான் மட்டும் வெயிலில் காய்கிறது. இந்த ஆலமரத்தின் சுபாவந்தான் மகான்களின் சுபாவமும். பிறர் சுகப்படுவதற்காக அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆலமரம் வெய்யிலில் நிற்கிறதே என்று புலம்புவதால் என்ன பயன்?"

— இராஜாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்தெழுந்தேன்!

மாசில் இனிய குழல் ஊதி
மலர்கள் தூவி எழுப்புகிருய்!
ஓசை கேட்ட பின்னு மின்னும்
உறங்குவேனே....? விழித் தெழுந்தேன் 1

அழகார் அமைதிதனில், இயற்கை
அஞ்சல் செய்து துதிக்கையில், யான்
மழலைக் கவிதை இசைத் துன்னை,
வழுத்து கின்றேன் பரம் பொருளே! 2

விண்ணில் சுடரும் தாரகை உன்
விரிந்த ஒளியில் ஆழ்ந்தன! "யான்"
என்னும் அகந்தைதனை, உன்னில்
ஆழ்த்தி நெஞ்சம் கலந்திடச் செய்!. 3

உதயப் பொழுதில் புள்ளிசையாய்,
உள்ளம் மகிழ்வில் பொங்கையில், என்
இதயக் கிளியும், உனைக் கூவி
இன்பப் பண்ணை இசைத்திடுதே!. 4

உனது அழகும் புன்னகையால்,
உயிர்த்த வாழ்வும் பொன்மலரை,
உனக்கே சூட்டி உன் அருளில்
உள்ளம் கலக்கச் செய்துவிடு!. 5

— மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனியும் கன்னியும்

விண்பொர நிவந்த கொடுமுடிகளை உடையது அம்மலை. கல்லென்று இழிதரும் அருவியும், மெல் லென்று ஆடிவரும் தென்றலும், பொருந்திய ஓல் லென்று ஒலியெழுப்பும் கானினையும் கொண்டது! கண் ணுக் கெட்டிய தூரம் எல்லாம் பச்சைப் பசேலென்ற காட்சி நல்கும் சோலைப் புறங்களையும், நன்செயும் புன் செயும் கொஞ்சி விளையாடும் விளை நில மலைச் சரிவினை தனக்கு அணியாகக் கொண்டது அம்மலை. அத்தகைய வளப்பம் சார்ந்த அத்தகைய அந்த மலைக்குரிய (அத்) தலைவன் கானுற்று அடைகரைச் சிற்றூரிலே வாழும் காரிகை ஒருத்தியைக் கண்டு காமுற்றான். தோழி யின் வாயிலாக ஊடலும், கூடலும் பன்னாட்கள் நடை பெற்றது. தலைவியின் தினைப்புனக் காவலும் கடந் தது. நாட்கள் பலவும் நடந்தன. பிரிவென்னும் கொடுந்துயரும், ஆற்றாமையும் எல்லை கடக்கவே பெண் கேட்கக் கிளப்பி விட்டான். பிடிக்கனத்தன்ன முள் ளுடைய பலாப் பழங்களைக் கொண்டு வந்து தலைவி யின் இல்லத்தில் நிரப்பி செவிலித் தாயைப் பெண் வேண்டினான். கனியைக் கொண்டுவந்து பரிசுப் பொரு ளாக ஏற்றுக் கொண்டு கன்னியைக் கேட்கும் தலைவ னது தன்மையை செவிலித் தாயும் ஓர்ந்து பார்த் தாள். மகளின் களவினையும் ஓரளவு அறிந்திருந்த வளே. ஆகலான் நற்றாயிடம் சென்று உசாவினாள். நற்றாய் தம் ஐயனிடமும், தனயனிடமும் நன்மை யாய்க் கலந்துரையாடி ஒப்புதலும் பெற்றுவிட்டாள். நற்றாய் வந்து செவிலித் தாயிடம் ‘‘சம்மதம்’’ என்று மொழிந்தாள். செவிலித் தாய் செவ்வேளென வீற் றிருக்கும் தலைவனிடம் வந்து ஒண்டொடியாள் இல் லத்தார் உரைத்ததை உவந்து உரைத்தாள். தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் தாங்கொண்ணு மகிழ்வோடு புறப்பட்டான். இதைக் கரந்துறைந்து செவிமடுத்த செவிலித்தாயின் குலக் கொழுந்து இந்த "அமுதமான" தென் தமிழ்ச் சொல்லை மொழியவேண்டிய இடத்தில் மொழிய ஆடிப் பாடி ஓடினுள். தலைவியைக் கண்டாள்; தழுவினுள்; அவளின் சத்தான கொத்துக் கன்னத்தில் கன்னம் வைத்தாள்; குழலோடு குழையாடும் காதைத் திருகி னுள். "இன்பம் கொள்ளேயோ கொள்ளே" என்ருள். எதிர்பாராத இந்த நிகழ்ச்சிகளைக்கண்ட தலைவி அறியாது, என்னடி இது; யாருக்கடி இன்பம்; அஃதும் கொள்ளேபோகின்றஅளவுக்கு" என்று வெகுண்டுரைத் தாள். "கனி கொடுத்தவளைக் கட்டியாளப்போகி ருளே அந்தக் கன்னிக்கு. இல்லை, இல்லை.. காளைக் குக் கன்னியைத் தருகின்றேன் "வருக" என்ருளே அவளுக்கு." "கனியா? கொடுத்தவரே? யாருக்கு எவர் ஏன் கொடுத்தார்?"

"என் தாய்க்கு, 'இல்லை, இல்லை' உன் செவிலித் தாய்க்கு"

"எதற்குக் கொடுத்தார்? எஞ்ஞான்று கொடுத் தார்?"

"தாயல்லவா? ஒருத்தியும் உயிர்போகாமல் காப் பாற்றினுள்! நற்குலத்திற்கு வடுவாராதவாறு களைந் தாள்; நற்புகழையும் அதனுல் பெற்ருள்."

"உயிரைக் காப்பாற்றினுளா? யார் உயிரை யார் காப்பாற்றியது? யார் குடி குற்றம்பெற இருந்தது; அதைத் தடுத்தாள்; அதனுல் புகழ் பெற்ருள். என் னடி இது, ஒன்றும் விளங்கவில்லை. கொஞ்சம் விளக் கமாகச் சொல்லேன். "அல்லும் பகலும் இடையருது தாங்கலாகா உயிர்தாங்க வல்லனையும் வந்து பார்க்க வில்லையே என்று வருந்துபவள் எவளோ, அவள் உயி ரைத்தான் போகாமல் தடுத்து நிறுத்தினுள். ஆம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் உயிரையேதான். என் உயிரையா! எவ்வண்ணம் தடுத்தாள்? ஏன் தடுத்தாள்? அமிழ்துக்கு ஒப்பான தமிழ்ச்சொல்லைக் கொடுத்து'' ''தமிழைக் கொடுத்து உயிரைத் தடுத்தாளா? என்னடி இது? புதிர் போடுகின்ருய்?'' ''உனக்கு அவ்வண்ணந்தான் இருக்கும். உரைக்கின்றேன் கேள். இனிதான தமிழ்ச் சொல்லைச் சொன்னுள். உயிர் ஒன்றல்ல; இரண்டு மீண்டது'' அத்துணை ஆற்றலா அந்தச் சொல்லுக்கு? விரைவில் உசாவுக.... உசாவுக.

''இரு..இரு.. பையப்பையத்தான் சொல்லுவேன்''

''சரி; சரி..சொல்..ம்..''

''வருக'' என்ற சொல்.

''எதற்கு வருக, ஏன் வருக'' என்று உரைத்தாள்.

மணமுரசு அறைந்து, சீதனப் பொருள்களோடு, மாவுந் தேனுங்கொண்டு மணவறைக்கு வரவேண்டிய செய்தியை உறுதிப்படுத்த உற்ருேரும் பெற்ருேரும் சூழ ஊரறிய வருக என்றுரைத்தாள். ஆமாம்.... திருமணத்திற்கு நிச்சயதார்த்தம்செய்ய. புரிகிறதா?'' என்ருள்.

''புரிகிறது....புரிகிறது. யாருக்கும் யாருக்கும் திருமணம்''

''அன்ெருருநாள் காஞற்றுச் சோலையிலே பலாச் சுளையை அவர்....ம்..நான் எப்படிச்சொல்ல. அவளுக்கும் அவளுடைய காதலனுக்கும் திருமணமாம். இன்னும் புரியவில்லையா? உனக்கும்.. உன் காதலருக்கும்..''

''உனக்கும்.. உன் கா..த..'' அவ்வளவுதான் அவள் செவியில் விழுந்தது. செந்தமிழாய் இனித்தது. மழலையாய் ஆனது; நறுமணமாய்க் கமழ்ந்தது. அந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தச்சொல் இன்பத்தேனுய் மெய்யெங்கும் பாய்ந்தோடியது. உணர்ச்சிவயமானுள்; அப்படியே அவளைக் கட்டினுள். ஆட்டினுள்; உருட்டினுள்; கொத்துக் குழலைக் கோதினுள்; ஆரத் தழுவினுள். இரண்டு முகமும் ஒன்ருயிற்று; ஒருத்தி உதடு மற்ருெருத்தி மாம்பழக் கதுப்பைப் பதம்பார்த்தது. ஒன்று..பத்து..நூறு..போதும்..போதும் கொடுத்த கடனேடு வட்டியும் திருப்பிக் கொடுத்தது பத்துமடங்கு அதிகமாயிற்று'' என்று அறிவித்தாள். 'ஆம்' அறிவித்தது தோழிதான்.

அன்றுகுறியா நாட்டத்தில் (இன்பம்) குறைவின் பத்தோடு பலாச்சுளை தின்ருய். இனிகுறித்த இன்பம் இனியபலா, வேர்ப்பலா, இன்பப்பலா, விழைந்து தின்னும்பலா, வேணவாதீரும்பலா வேண்டிய மட்டும் கிடைக்கும்பலா..ம்.. இருவரும் தின்பீர் கொடுத்து வைத்தவள் என்னை மறக்கமாட்டாயே..'' 'உனக்கு இதே தொழில்தான் எப்பொழுதும். நாங்கள் இருவர் தான் உனக்குக் கிடைத்து விட்டோமோ?.... இருக்கட்டும் நீயும் ஒருநாளைக்கு..'' நழுவி ஓடினுள்.... ''இரு; இரு இப்போது வேண்டாம் இந்த வேலை. என் திருமணம் முடிந்தவுடனேயே உடன் போக்கு வழியில்லாமலேயே உன்னின்.... முடித்து வைக்கிறேன்''. தலைவியும், தோழியும் மீளவும் ஆரத்தழுவிக் கொண்டனர். இத்தகைய கற்பனை நயந் தோற்றுவிக்கும் பாடலை, கருவில் திருவுடைய ஒல்காப் பெரும் புகழ் மேவிய செந்தமிழ்ப்பாவலர் வெண்பூதனுர் யாத்த குறுந்தொகைப் பாடலைக் காணுங்கள்.

"அரும்பெற லமிழ்த
மார்பத மாகப்
பெரும்பெய ருலகம்
பெறீஇயரோவன்னை
தம்மிற் றமதுண்
டன்ன சினைதொறும்

265
ARU
188873
N.A
UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீம்பழந்தூங்கும்பலவின்
ஓங்குமலை நாடனை
வருமென்றோளே"

— வெண்பூதனார் குறுந்தொகை 83.

## பாடலின் கருத்து

தமது மனைக் கண்ணே வீற்றிருந்து, தம்மரபுக்கு உரியதென்று நூல்வல்லோர் வகுத்துரைத்ததைக் கடவாமல் ஒழுகி உண்டாற்போன்ற இன்பமுடைய நாடனை, அன்னை நாளை மணம் பேசுதற் பொருட்டு ''வருக'' என்றுரைத்தாள். இதனால் அவள் பெறலரிய அமிழ்தம் அருந்தும் உணவாகப் பெரும் புகழ் உலகம் பெறுக என்றும் உரைத்தாள். களவொழுக்கம் தம்மில் இருந்து தமது உண்டது ஆகாது ஆதலான் இதனையே அவ்வண்ணம் மகிழ்ச்சியாய் மயங்கி விடாமல், திருமண உடன்பாட்டிற்கு (நிச்சயதார்த்தம்) தவறாமல் வருக என்னும் முகத்தான்; அவர் நெறியைப் போற்றி மறைந்து வருகின்ற நாடனை விரைவில் சுற்றத்தினரை அழைத்துக்கொண்டு ஊரறிய வருக என்று உரைத்தாள்.

⊙ ⊙ ⊙ ⊙ ⊙ ⊙ ⊙ ⊙

கோபத்தினால் ஒரு லாபமுமில்லை. அது கௌரவத்தையும் தராது. பொருளும் தராது. துன்பந்தான் அதன்விளைவு. இதற்குமிகப்பொருத்தமான உபமானம் கொடுத்துச் சொல்லுகிறார் முனிவர்.

சினத்தைப்பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்து அறைந்தான் கைபிழையாது அற்று.

நிலத்தை அறைந்தால் நம்கைதான் வலிக்கும். எவ்வளவுக்கு எவ்வளவு பலமாக அறைகிறோமோ, அவ்வளவு நாம் நோவு அடைகிறோம். இது நிச்சயம். கோபம் கொள்ளுகிறவனுடைய செய்கை இத்தகையது. தன்னைத்தான் துன்பப்படுத்திக்கொள்கிறான். அதனால் என்ன சுகம்? என்ன பயன்? நிலத்தை அறைவதைப்போல் தன் மனத்தைத் துன்பப்படுத்திக் கொள்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


## நல்லூர்த்
## தேவஸ்தான வித்வானுக்கு
# தேவஸ்தான மரியாதை.

நல்லூர்க்கந்தன் உற்சவத்தை ஒட்டி திரு. மணி பாகவதர் அவர்களால் இருபத்தைந்து தினங்களும் கந்தப்புராண விரிவுரை நடைபெற்றது. தினம் ஆயிரக்கணக்கான மக்கள் நள்ளிரவுவரை இருந்து ரசித்தனர். தீர்த்தத்திருநாளன்று கந்தப்புராண விரிவுரைப் பூர்த்திவிழா, சிறப்புற நிறைவேறியது. முன்னைநாள் நீதிபதி உயர்திரு. தனபாலசிங்கம் அவர்கள் தலைமை வகித்தனர்; ஆலயக் கோபுர வாசலிலிருந்து, மங்கல வாத்தியசகிதம் விழாப்பந்தலுக்குப் பாகவதர் அவர்களை அழைத்துவந்தனர். தேவஸ்தான காவலர் குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியார் அவர்கள் சார்பில் முன்னைநாள் சுங்க இலாகா அதிகாரி திருநாவுக்கரசு அவர்கள் பாகவதர் அவர்கட்குத் தேவஸ்தான சார்பாகப் பொன்னுடை சூட்டிக் கௌரவித்தனர். நீதிபதி அவர்கள் பாகவதர் அவர்களது சேவையைப்பாராட்டியபின் டாக்டர் நந்தி அவர்கள் பாராட்டுரை வழங்கினார்; பின் வள்ளிதிருமண கதாகாலக்ஷேபத்துடன் இரவு ஒருமணியளவில் விழாப் பூர்த்தியடைந்தது.

வாழ்க சீரடியாரெல்லாம்.

செயலாளன்
R. கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி ஸ்ரீ சிதானந்த மகராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதானந்தர்
# திருவடிகள் வணங்குவாம்.

திருநெறி வாழ்வு கண்டோம்
திவ்ய ஜீவனம் கண்டோம்
ஒருநெறி உலகம் கண்டோம்
ஒற்றுமை ஓங்கக் கண்டோம்
கருணைதான் பொழியக் கண்டோம்
கண்களும் மல்கக் கண்டோம்
பெருமகான் சிதானந்த ஜீயின்
பேரடி பதித்த போதே.

அறிவிலே அருணன் என்கோ!
அன்பிலே அன்னை என்கோ!
நெறியிலே நிமலன் என்கோ!
நினைவிலே நீயே இருத்தி
கறியிலே உப்பு என்கோ!
கருணையில் கடலே என்கோ!
சிறியதோர் இலங்கைத் தீவில்
சிதானந்த ஜீவருக வருகவே!

கருணைபொழி முகத்தழகும் காதல்நிறை கண்ணழகும்
அருணனொளி அகத்தழகும் அம்பிகையின் அருள்நிறைவும்
தருணமழை போலுதவும் தயவுடைய திருக்கரமும்
திருவுடைய சிதானந்தர் திருவடிகள் வணங்குவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு
தெய்வநெறிக் கழகத்தினர்
சுவாமி ஸ்ரீ
சிதானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களுக்கு
மகிழ்ந்தளித்த

# வரவேற்புப் பாமாலை

இறைவா நீ எங்கே இருக்கிறாய்? — ஏனோ
மறைவில் இருக்கின்றாய்? மானிடர் யாம் நின்வடிவம்
காண நினைந்தோம்! நினைந்த மறுகணமே
வீணாசைக்குள்ளே விழுந்து தடம் புரண்டோம்!
பெற்றார் புரிந்த பிழை புரிந்து துன்புற்றோம்!
சுற்றி மயக்கும் சுழற்சியிலே யாம் புரண்டோம்!
அன்பென்று சொன்னார்.... அனைவருக்கும்தான் சொன்னார்!
பெண்பாலும் ஆண்பாலும் கூடிப் பெரும்பாலும்
தம்மிடையே உள்ள தசையுணர்வை அன்பாக்கி
சும்மா கொடுப்பதற்கோ பேரன்பைச் சொல்லிவைத்தார்?
காதலொரு மூன்றுநாள்! கட்டிலறை முப்பதுநாள்!
போதை கருவாய்ப் புறப்பட மூன்னூறுநாள்!
பிள்ளை வளர்ந்து பெரிதாகிப் பின் உலகில்
தொல்லை கொடுக்கும் நாள் துன்பநாள் எத்தனைநாள்?
ஐயோ! மனிதன் பிறந்து பிறந்தழுந்திச்
செய்யும் கொடுமை சிறிதென்று செப்புவதோ?
காசென்றும் மாடிமனை என்றும் கதை புலம்பி
ஆசைப் பெருவெளியில் ஆடித் திரிவதுவும்
உண்ணும் மதுவின் வெறியும் உயிர்க்கொலையும்
மண்ணில் கயமை மலிந்து கிடப்பதுவும்
உள்ளுங்கால் நெஞ்சம் உருகுதற்கு யாருள்ளார்?
வெள்ளம் தடுக்க வரும் வீரர் எவருள்ளார்?
ஆகாயத்தின் மேல் அறிவு வலம் வரவும்
பாதாளத்தின் கீழ் இதயம் புதைபடவும்
தன் தலையில் குண்டுகளைத் தானே பொழிதற்கு
விண்வெளியில் செல்லும் வெறிமனிதன் உள்ளத்தில்
அன்புசுரக்க அருள்சுரக்க யார் வருவார்?
இன்பம் நிறைந்த இதயம் எவர் தருவார்?
வீணாசை கொண்டு வெளியோசை கொண்டிங்கே
ஆணாகிப் பெண்ணாகி ஆடும் உலகினிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னொன்றுக்குள்ளே தசையுடலின் உட்புறத்தே
இன்னொன்றைக் காணும் இறைமனிதர் எங்குள்ளார்?
என்றுயாம் ஏங்கி இருக்கையிலே தெய்வத்தின்
குன்றில் இமயத்தில் முனிவன் திருக்கோயில்
ஒன்றைப் படைத்தான் இறைவன்! அடடாவோ!
வென்று பிறந்தான் சிவானந்த வீரமகன்!
அந்தப் பெரியன் அறம் வளர்த்துத் தெய்வத்தின்
சிந்தைக்குள் சேர்ந்தான்! எனினும் அவன் செயலை
நீளவளர்த்து நிலம் வளர்க்க ஓர் முனிவர்
கோலம் எடுத்தார்.... கொடுத்து வைத்தோம்... உண்மைதான்!
சிதானந் தத்துறவி சீரடிகள் பரவிவரும்
இத்தரையில் யாம் வாழ என்னதவம் செய்தோமோ?
மீன்பாடும் தேனுட்டில் மெய்யறிவுத் தேன்பாடத்
தான்பாடும் ஞானத் தவமகனின் தாழ்தொழுதோம்!
வெட்டவெளி நகருள் வீடமைத்து வாழ்பவரை
மட்டுநகர் வாழும் மக்கள் வரவேற்ருேம்!
எல்லாம் உணர்ந்த இனிய விபுலானந்தன்
இல்லத்தில் வாழ்ந்தோம்! இறைமகனை வாழ்த்திஞேம்!
தெய்வநெறிக் கழகத் தொண்டர் திரண்டிங்கு
உய்யும் நெறியுரைத்த உத்தமனைக் கும்பிட்டோம்?
ஆழக்கடல் தாண்டி அன்புக்கடல் சுமந்து
வேலைக்கு வந்த விழுப்பொருளைப் போற்றிஞேம்!
வெள்ளிப் பனி இமய வெற்பிருந்து வந்தவரின்
உள்ளிருக்கும் தெய்வத்தின் உள்ளம் வணங்கிஞேம்;
நாங்கள் மனிதர்.. இறைவன் நகர் தேடி
யாங்களும் சென்றலைந்தோம்...யாது பயன்? ஆமாம்..
இறைவா! நீ எங்கே இருக்கிருய்? ஏஞே
மறைவில் இருக்கிருய்? மானிடர் யாம் நின்வடிவம்
காண நினைந்தோம்.. நினைந்த மறுகணமே
வீஞைசக்குள்ளே விழுந்து தடம் புரண்டோம்!
என்ருலும் உண்மைப் பொருளே! எமக்கொருவர்
இன்று கிடைத்தார்.. இவர் வழியே செல்வோம்!
உனக்கும் எமக்கும் உறவுவரும் காலத்தின்
கணக்குத் தெரிந்தவரின் காலடிகள் பின் தொடர்வோம்!
சிதானந்த முனிவன் ஆய்ந்து வரும் தெய்வத்தின்
தத்துவங்கள் கண்டோர் தலைவனையே கண்டோரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி சிவானந்தரைப்பற்றி சிதானந்தஜீ உலகுக்கு விடுத்த செய்தி

இருள் சூழ்ந்துவரும் இவ்வுலகின்கண் தெய்வீக வாழ்க்கையாகிய ஒளியைப் பரப்பும் பணியில் தங்கள் பங்கு பெருமதிப்பு வாய்ந்தது.

பாரதநாட்டுமுனிவர்களின் இடையரு முயற்சியும் தியாக வாழ்வும், மக்கள் தமது அகத்தே சாந்தி எய்தவும் புறத்தே இயைபுடன் வாழவும் வழிகாட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. மனிதனை உயர்த்துவதே அவர்களது உளப்பூர்வமான குறிக்கோள். தங்கள் உடன் வாழ்வோருக்கும் எதிர்வரும் சந்ததியாருக்கும் அவர்கள் வழங்கிய அருட்கொடை இதுவே. இத்துறையில் ஸ்ரீ சுவாமி சிவானந்தர் ஆற்றிவரும் தன்னலமற்ற வாழ்க்கைப்பணி யாவரும் அறிந்தது.

இன்று மனித சமுதாயத்தின் முன்னே மாபெரும் பிரச்சனையொன்று தோன்றியுள்ளது. எண்ணற்ற மக்களின் உள்ளங்களைப் பீதி பற்றியிருக்கின்றது. விஞ்ஞானத்துறையில் மனிதன் அடைந்துள்ள முன்னேற்றமே பல நாடுகளுக்குப் பெரும் பிரச்சனையை ஏற்படுத்திவிட்டது. பேரழிவு தங்களை எதிர்நோக்கியிருப்பதாகப் பொதுமக்களுக்குத் தோன்றுகிறது. தனது சொந்த மடமையிலிருந்தும், பிடிவாதத்திலிருந்தும் தீமையிலிருந்தும் மனிதனைக் காக்க, இவ்வபாயநிலையின் காரணமோ அதன் பரிகாரமோ இன்னும் உணரப்படவில்லை.

## நம்பிக்கையூட்டும் செய்தி

கற்றறிந்த தலைவர்கள் இப்பிரச்சனையைத் தீர்க்கும் முறையில் ஏதோ அடிப்படையான பிழை இருப்பதாக நீங்கள் உணர்கிறீர்கள். இம்முறைகள் திரும்பத் திரும்ப தோல்வியுறுவதையும், நிலைமை மேன் மேலும் மோசமடைந்துகொண்டு போவதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும்போது உங்கள் கவலை அதிகரிக்கின்றது. உங்கள் உள்ளத்தில் சாந்தியில்லை. இருளில் உழலும் மனிதகுலத்தின் பாதையில் ஒளி தோன்றுதா என ஏங்குகிறீர்கள். தற்கால மனிதன், தனது துவேஷம், பலாத்காரம், பேராசை, குரோதம். சுயநலம் ஆகியவற்றால், தானே சிருட்டித்துக்கொண்ட வலையிலிருந்து விடுதலை காண அனைத்துணரும் பேரறிவிலிருந்து வழி தோன்ற வேண்டுமென விழைகிறீர்கள். நம்பிக்கையூட்டும் செய்தியொன்றை எதிர்பார்க்கிறீர்கள். உலகின் கவலைமிக்க குழப்பநிலையைமாற்றி நலம்விளைக்க, உங்களால் இயன்றதையெல்லாம் செய்ய ஆயத்தமாக இருக்கிறீர்கள்.

இங்ஙனம் நீங்கள் உணர்வதும் விரும்புவதும் நியாயமே. உங்களைப்போல் உள்ளத்தில் நம்பிக்கையும் நல்லெண்ணமும்கொண்ட அறவோர் அனைவரும் இறைவனது தெய்வீக இச்சைஉலகில்செயற்படுமாறு உழைத்தல் அவசியமாகும். ஏனெனில் மனிதனின்மூலம் இறைவன் செயலாற்றுகின்றார். அடக்கம் வாய்ந்த உங்களைக் கருவியாகக்கொண்டு இறைவன் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கான தமது திட்டங்களை நிறைவேற்றுகின்றார்.

"அறநெறியை விரும்புவோர் அருள் பெற்றவர்கள்" "சமாதானத்தை நிலைநாட்டுவோர் அருள் பெற்றவர்கள்; ஏனெனில், அவர்கள் தெய்வக் குழந்தைகள் ஆவர்" என்ற வார்த்தைகள் வீணுகக் கூறப்பட்டவையல்ல. "பரலோகத்தைப்போலவே பூவுலகிலும் உமது இச்சை நடைபெறுமாக" என்று நீங்கள் பிரார்த்தனை செய்தால் மட்டும் போதாது. உலகில் சமாதானத்துக்கும், அன்புக்கும், நன்மைக்கும், தெய்வீக இசைவுக்கும், இறைவனது இச்சை பயன்படுமாறு நீங்கள் வாழ்நாளில் மனப்பூர்வமாக உழைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைக்குப் பரிகாரம்

இந்த உயர் இலட்சியத்துக்காக இடையருது உழைத்துத் தன்னலமற்ற தியாக வாழ்வு வாழ்ந்து வரும் ஒரு தெய்வீக ஆன்மா இரிஷீகேசம் சத்குரு சிவானந்த சுவாமிகள் என்பது உங்களுக்குத் தெரியும். இமயமலைச் சாரலிலுள்ள இக் குக்கிராமத்தில், கங்கையின் புனிதக்கரையில், தமது சின்னஞ்சிறு குடிலில் இருந்துகொண்டு, மனிதனது தெய்வீகத்தன்மையைப் பற்றியும், அத்தன்மைக்கு உருக்கொடுத்து வெளிப்படுத்தத் தெய்வீக வாழ்க்கையின் அவசியத்தைப்பற்றியும் தமது அருட்போதனைகளைப் பரப்பி வருகின்ருர். சுவாமி சிவானந்தர் அகிலமனைத்தையும் நேசிக்கும் சாது. ஒருமைக் காட்சியில் திளைத்திருக்கும் உத்தமர். யாவர்க்கும் பற்றின்றிப் பணிபுரியும் பண்பாளர். புறப் பிரச்சினைகள் அனைத்திற்கும் பரிகாரம் முடிவில் மனிதனது அகத்தன்மையிலேயே தங்கியுள்ளது என்பது அவரது தெளிவும் உறுதியும் வாய்ந்த செய்தியாகும். உலக நெருக்கடியாகத் தோன்றுவது உண்மையில் மனிதரின் இதயங்களில் உள்ள நெருக்கடியின் நிழலும் விளைவுமேயாம். மனித உள்ளத்தில் உயர்ந்தன யாவும் புறக்கணிக்கப்பட்டு, அங்கு பேராசை, துவேஷம், சுயநலம் ஆகியவற்றுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. மனிதனது ஆசைகளிலும், அவனது செயல்களின் நோக்கங்களிலும் ஒழுக்கத்தின் வறட்சி தெளிவாகப் புலப்படுகின்றது. ஒழுக்கச்சார்பற்ற கல்வி, சமீபத்திய தலைமுறையின் உள்ளங்களைக் கறைப்படுத்தி மூளையைக் குழப்பியுள்ளது. நன்னடத்தையும் உயர்ந்த இலட்சியங்களும் மனித வாழ்க்கையில் உரிய இடம் பெறுவதில்லை. பலவந்தமாகக் கைப்பற்றுதலும் உடைமையைப் பெருக்குதலுமே மனிதச் செயல்களின் இலக்கணமாய்விட்டன. இதுவே மனித இயல்பில் இப்போது தோன்றியுள்ள நெருக்கடி. எமது பிரச்சினை யுத்தமும் பலாத்காரமுமோ, அழிவும் சிதைவுமோ அல்ல. உண்மையான பிரச்சினை மனித இயல்பின் கோட்டமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். மனித இயல்பின் நன்மாற்றமே இதற்குப் பரிகாரம். இம்மாற்றம் எவ்வளவு மெதுவாக நிகழ்ந்தாலும் சரியே. இதனைவிட்டு, உச்சி மகாநாடுகளாலும் சந்தேகத்துக்கிடமான உடன்படிக்கைகளாலும் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. ஒழுக்கவீனம் ஆன்மீக மறதி ஆகியவற்றிலிருந்து மனிதனைக் காப்பதன்மூலம் இதனைத் தீர்க்கலாம்.

எமது கடமை

குருதேவரின் ஆன்மீக போதனைகளின் தேவையையும் மதிப்பையும் மேன்மேலும் அதிகமான மக்கள் உணரச்செய்வதன் அவசியத்தை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். ஏனெனில் கண்ணபெருமான், புத்த பிரான், ஏசுநாதர் ஆகியோரைப்போன்ற முற்காலத் தெய்வீகத் தூதர்களது ஞானத்தின் சாரத்தை இப் போதனைகள் மக்களுக்கு வழங்குகின்றன.

ஒழுக்கநெறிக்குப் புத்துயிரளித்து, ஆன்மீக இலட்சிய வாதத்தைப் பரப்புவதற்காகச் சோர்வின்றி உழைத்துவரும் சக்திக் களஞ்சியமான மகான் ஒருவரை நவீன உலகம் பெற்றுள்ளது. அவரே சுவாமி சிவானந்த மா முனிவர். அவரது உயிர்த்துடிப்புள்ள போதனைகளை உலகின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள எண்ணற்ற ஆண் பெண்கள் அறிந்து பயன்பெறச் செய்வதற்கு உங்கள் உதவி தேவை. அவரது தெய்வீக வாழ்க்கைப் போதனைகளைப்பற்றி நீங்கள் அறிவீர்கள். அவற்றைப்பெறும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்துள்ளது. ஆனால் உங்களைப்போல் மகிழ்ச்சியும் நல் வாய்ப்பும் பெறாதவர் எத்தனை பேர் என்பதை எண்ணிப் பாருங்கள்! அவர்களும் இம்மகானைப்பற்றியும் அவரது சக்திவாய்ந்த போதனைகளைப்பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிறோம். அவர்களும் அவரது போதனைகளின் நற்பயனைப்பெற்று, அவருடன் ஆன்மீகத் தொடர்பு கொள்வதன் மூலம் தங்கள் வாழ்க்கையை வளமுறச் செய்யவேண்டுமென்பது எங்கள் விருப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக வாழ்க்கையின் அழைப்பு

நீங்கள் இதனைச்செய்ய உதவுவதற்காக ஒவ்வோராண்டும். (சுவாமி சிவானந்தரின் பிறந்த தின ஆண்டு நிறைவுத் திருநாளில்) "திவ்யஜீவன"ப் பத்திரிகை "விசேஷப் பிறந்த தினமலர்" ஒன்றை வெளியிட்டு வருகிறது. அவரது ஒழியூட்டும் வாழ்க்கை, சோதி மயமான தனிப்பண்பு, உலகசேவை, அறிவூட்டும் போதனைகள் ஆகியவற்றினை உங்களைப் போன்ற ஆன்மீக நாட்டமுடைய பிறரும் அறியச் செய்வதே இம் மலரின் நோக்கம்.

மக்கள் தமது உயர் இயல்பை அறியச் செய்வது தற்போதுள்ள மாபெரும் தேவை. தெய்வீகத் தன்மையுடன் தமக்குள்ள அகத்தொடர்பை மக்கள் உணரச் செய்வதன் மூலம் அவர்களை நல்வழியிற் செலுத்துதல் முக்கியமானது. தெய்வீக வாழ்க்கையின் உள்ளத்தைத் தொடும் அழைப்பு உலகின் ஒவ்வொரு மூலைக்கும் எட்ட வேண்டும். மனிதனை நன்னெறிப் படுத்த இந்த நம்பிக்கை ஒன்றே உள்ளது. குருதேவரின் அகில மனைத்துக்கும் பொதுவான அருட் போதனைகள் உங்கள் வாழ்க்கையில் எங்ஙனம் உதவியுள்ளன.

'உங்கள் ஆன்மீக எழுச்சி உலகின் உயர்வாழ்வுக்கு ஊக்கமளிக்க உதவட்டும்.

◉ ◉ ◉ ◉ ◉ ◉ ◉ ◉

ஈழத்தில் இரு இடங்கள்:

ஈழவழநாட்டில் தேவாரம் பெற்ற புராதன புண்ணிய தலங்கள் இரண்டு உள. அவை திருக்கோணமலை திருக்கேதீச்சரம் என்பனவாகும். மாதோட்ட நகரில் உள்ளது திருக்கேதீச்சரம் இது சைவசமயிகளால் மிகவும் புனிதமாக மதிக்கப்படும் புனித ஸ்தலமாகும். பழம் பெருமை கொண்டது மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளமுதம்

★ ★ நவராத்திரி அனுபந்தம்



தினமும் தேவியைத் தொழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அருளமுதம்

# நவராத்திரி அனுபந்தம்

நவராத்திரி தினத்தைக் கொண்டாடாத இந்துக்கள் இல்லங்களே இல்லை: வீடுகள் தோறும் கலைகளில் விளக்கம் காட்டுவது நவராத்திரி. வீட்டுக்குவீடு, கோயிலுக்குக் கோயில், பாடசாலைக்குப் பாடசாலை, சங்கத்திற்குச் சங்கம் போட்டி போட்டுக் கொண்டு தேவிவழிபாடு செய்யும் நாட்களே நவராத்திரி.

நவராத்திரி என்றால் ஒன்பது இரவு நடைபெறும் நோன்பு ஆகும். வடநாட்டில் தசரா என்று பத்து இரவு கொண்டாடுவர். புரட்டாதி மாதம் வரும் பூர்வ பக்கப் பிரதமைத் திதி முதலாக உள்ள ஒன்பது இரவுகள் நவம் (ஒன்பது) — நவராத்திரி எனப்படும். வடக்கே காஷ்மீரம் முதல் இலங்கை வரையிலும், மேற்கே பாஞ்சாலம் முதல் பர்மா வரையிலும் இவ் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. பராசக்தி வணக்கமே இவ்விழாவின் நோக்கமாகும்; சக்தி வணக்கம் தாய் வணக்கம்: தாயாகப் பக்தி செய்வது தலையானதாகும். அம்மையே அப்பா என்கிறார் மணிவாசகனார். ஆண்டானிடம் அடிமை கிட்டநிற்க முடியாது எட்ட நிற்கிறான்; தந்தையிடமும் தனயன் மிக நெருங்கி உறவாடுவது கிடையாது; வயது முதிர, முதிர பிதாவும் பிள்ளையும் சற்று எட்டவே போகின்றனர், வேற்றுமையும் கூடுகிறது; ஆனால் தாயன்பு, சேயன்பு என்றுமே மாறாது; தாயோடு பிள்ளைகள் பழகச், சட்ட வரம்பு கிடையாது; வீரசக்தி, துர்க்கை, தனதான்ய யோகசக்தி, லக்ஷ்மி, கலாசக்தி சரஸ்வதி, முதல்மூன்று நாளும் வெற்றியை வேண்டித் துர்க்கையையும், அடுத்தமூன்று தினங்களும் செல்வத்தை வேண்டி இலக்குமியையும், இறுதி மூன்று நாளும் கல்வியை வேண்டிச் சரஸ்வதியையும் வழிபடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாம் நாள் இரவு ஆயுத பூஜை என்பர். விஜயதசமி அன்று வித்யாரம்பம் நடைபெறும், ஆகவே பத்து நாட்களும் கலைத்திருநாளாகவே நடைபெறுகின்றது.

இந்நவராத்திரி காலத்திலே வழிபாடு செய்வதற்கேற்ற பாடல்களைத் தொகுத்து அருளமுத வாசகர்கட்கு அளிக்கின்றோம். படித்துப்பயன்பெறுக.

ஆசிரியர்.

---

# நவராத்திரி

## பராசக்தி

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே!
ஏதாயினும் வழி நீ சொல்வாய் எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே. (1)

## பார்வதி

மலையிலேதான் பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலேயூதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்ந்திடுவாள், நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே. (2)

## ஸ்ரீ தேவி

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே. (3)

## வாணி

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமாவளி

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஓம்சக்தி ஆதி பராசக்தி ஓம்
ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெய ஜெகன்மாதா
ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெய லலிதாம்பா
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்தி சக்தி ஓம் சிவம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம் சிவம்
சத்தியஞான தர்ம சக்தி சாந்த சக்தி ஓம்சிவம்
சச்சி தானந் தாத்ம சக்தி சர்வ சக்தி ஓம்சிவம் (சுத்த)
வேதசாஸ்திர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம் சிவம் (சுத்த)
நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மகாமந்த்ர யந்த்ர தந்த்ர வஸிய சக்தி ஓம்சிவம்(சுத்த)
யோகபோக தியாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாக மோக சோகரகித தபோசக்தி ஓம்சிவம் (சுத்த)
துஷ்டசத்ரு நாசசக்தி துர்க்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலட்சுமி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சுத்த)
குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹரநட ராஜசுத்த சக்திஓம் (சுத்த)

— சுத்தானந்தர்.

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

சுந்தர வதன சுகுண மனோகரி
மந்தகாச முடைமதி வதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே (ஓம் சக்தி)
நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வலசுபாய் உன்புகழ் பாடிடவே (ஓம் சக்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச் சிலம்பு சலசல வென்றிட
தாண்டவ மாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம் சக்தி)
வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பிச் சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம் சக்தி)

ஜய ஜய ஜய சக்தி - ஓம் ஸ்ரீ
ஜய ஜய ஜய சக்தி
ஜய ஜய வெனதினம் பாடிப்பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத்தா - ஓம்ஸ்ரீ (ஜய)

திருப்தியும் இன்பமும் வாழ்விற்றுலங்க
தேவை யெல்லாம் மறைய - அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெமை - ஓம் ஸ்ரீ (ஜய)

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி பலமருள்வாய் - அம்மம்மா
கரம் குவித்தோம் இனிக் காலைவிடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ (ஜய)

காசினி யெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் - அம்மம்மா
தேசுடன் வாழக் காட்டிடி காட்சி
தேவியுன் அடைக்கலம் நாம் - ஓம் ஸ்ரீ (ஜய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம்வைத்து - அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்துக் கமைதியைத்தா - ஓம் ஸ்ரீ (ஜய)

- சாது முருகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவியின்
## திருநாம அர்ச்சனை (108)

அம்ம ணீ! ஜக தம்பிகே! கரு
ணாக ரீ! பர மேஸ்வரீ!
கண்ம ணீ! ஜெய கௌரி, காங்கயி.
கார்த்தி கே! திரி நேத்திரி!
தண்ம யீ! உப சாந்தி னி! சிவ
சாம்ப வீ! ஏ காம்பரீ!
சின்ம யீ! சுவ சீலி, மாலினி,
தேவி, சௌந்தரீ ஓம்நமோ!

பத்ர காளி, துர்க் கா, ப வானி.
பராசக் தி! பரி பாலினி!
சித்சொ ரூபிணீ, சிம்ம வாகினி,
திவ்ய ராஜரா ஜேஸ்வரி!
வித்வ பூஷணி, மீன லோசனி,
வீர மார்த்தனி, விமலினி,
சத்ய வாசனி, நித்ய கன்னி,
தயாப ரீ! நம, ஓம் நமோ!

குண்ட லீ! சந்த்ர மண்ட லீ! இளங்
கோம ளீ! இன்ப ஸ்யாமளீ!
சண்டி கா, சா முண்டி, பைரவி
சாவித் ரீ! ஜெப காயத்ரி!
அண்டர் நாயகி. ஆபத் பாந்தவி,
அமுத ஞானப யோதரீ!
தொண்டர் சாதகி. தூய வானதி,
சோம சேகரி, ஓம்நமோ!

சுத்த சக்தி, சுடர்க்கொ டீ! திவ்ய
சுந்த ரீ! ஸ்ரீபு ரந்தரீ!
வித்த கீ! தெய்வ நர்த்த கீ! ஜய
விஜயி, பாபவி நாசினி,
சித்த ரஞ்சனி, தெய்வ குஞ்சரி,
தேவ தா, உமா, பார்வதீ!
நித்ய வாணி, நிரஞ்ச னீ! மலை
நீலி, சங்கரி, ஓம்நமோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்த்ர மௌலி, சரஸ்வ தீ!திவ்ய
சார தா! ஜய பாரதீ!
சுந்த ராங்கி, சுரநு தாவிஸ்வ,
சோபி தா, சம்ப்ர பாவதீ!
மந்த்ர ரூபிணி, மாப கவதி,
மாஹி ஷாசுர மர்த்தனீ!
தந்த்ர சாதனி, செஞ்ச டாதரி,
சர்வ தாரகி, ஓம்நமோ!

அஷ்ட லட்சுமி, அபய ஹஸ்த னி,
அமலி னீ!செங் கமலினி,
நிஷ்டை யோகினி, நிமல வாகினி,
நிஷ்க ளங்கசந் யாஸினி!
துஷ்ட நிக்ரஹி, தூய வைஷ்ணவி,
ஜோதீ வேணி, சுமங்கலீ!
சிஷ்ட ரட்சகி, ஸ்ரீவ ராகினி,
சீத ளீ!நம ஓம்நமோ!

பூர ணீ!ஞான பூஷ ணீவேத
போதி னீ!தர்ம சாதனீ!
ஆர ணீ! நவ சீர ணீ!உல
காண்ட வீ! உக்ர தாண்டவீ!
கார ணீ!சிவ காமி னீ!ஜீவ
காரு ணீஜகன் மோகினி!
நார ணீ!பவ தார ணீ!புவி
நாய கீ!நம ஓம் நமோ!

— பரமஹம்ஸ தாசன்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

188873

## எங்கும் சக்தி

எங்கும் நிறைந்தசக்தி - புவி
யாவும் படைத்த சக்தி;
பொங்கும்பே ரன்புருவில் - அருள்
பொழியும் அமரசக்தி !
அண்டம் கடந்தசக்தி; - நுண்
அணுவுக்கணு வானசக்தி;
பிண்டம் சமைக்கும்சக்தி - புவி
பேணி வளர்க்கும்சக்தி!

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லில் உறங்குஞ்சக்தி, உயிர்க்
கனலில் துடிக்குஞ்சக்தி;
புல்லில் துளிர்க்குஞ்சக்தி, எழிற்
பூவில் மலருஞ்சக்தி!
காயில் புளிக்கும் சக்தி, - நல்ல
கனியில் இனிக்குஞ்சக்தி;
சேயின் எழில் முகத்தில் - இளஞ்
சிரிப்பை மலர்த்துஞ்சக்தி!

தீமை யகற்றுஞ்சக்தி, - உயர்
செல்வம் அளிக்குஞ்சக்தி;
வாய்மை துலக்குஞ்சக்தி - அருள்
வன்மை வளர்க்குஞ்சக்தி!
ஓங்கி வளர்ந்தசக்தி, - பல்
லுயிர்க்கும்உயி ரானசக்தி
தாங்கி யணைக்குஞ்சக்தி, - அருட்
தாயான சுத்தசக்தி!

# தேவி துதி

"பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி" குணாதீத
நாதாந்த சத்தி யென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்ச ரிக்க வசமோ?

ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ்
வகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைசூழ்
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்க்காத லிப்பெ ணுமையே.

— தாயுமானவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே !

UNIVERSITY OF ... LIBRARY

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமானந் தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே !

— குமரகுருபர சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குமி துதி

பொருளற்றவர்க்கிவ் வுலகில்லை என்றிப் புவிபுகழும்
தெருளுற்ற ஞானிஅப் பொய்யா மொழியில் தெரிந்துரைத்தான்
மருளுற்ற மாந்தரும் வற்றாத செல்வம் இவ்வையகத்துள்
அருளுற்ற லாதடைவரோ? செந்தாமரை ஆண்டவளே!

சித்தம் தெளிந்திடும், செய்வினை யாவும் திருத்தமுறும்
நித்தம் மறிந்தெழு செல்வமும் தக்கிநிலைபெறும்நல்
முத்தர்க்குரிய பெரும்பதம் வாய்க்கும், இம்மூதுலகில்
பத்தர்க் கருளும் திருமகள் பாதம் பணிபவர்க்கே.

நித்தமுனை வேண்டி மனம்
நினைப்பதெல்லாம் நீயாய்ப்
பித்தனைப் போல் வாழ்வதிலே
பெருமையுண்டோ? திருவே!
சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றி கொண்டே
உத்தமநிலை சேர்வரென்றே
உயர்ந்த வேதமுரைப்ப தெல்லாம்
சுத்த வெறும் பொய்யோடீ!
சுடர் மணியே! திருவே!
மெத்தமயல் கொண்டு விட்டேன்!
மேவிடுவாய் திருவே!

உன்னையன்றி இன்ப முண்டோ
உலகமிசை வேறே?
பொன்னை வடிவென் றுடையாய்
புத்தமுதே, திருவே!
மின்னொளி தருநன் மணிகள்
மேடை யுயர்ந்த மாளிகைகள்
வன்னமுடைய தாமரைப்பூ
மணிக்குளமுள்ள சோலைகளும்
அன்னம் நறுநெய் பாலும்
அதிசயமாத் தருவாய்!
நின்னருளை வாழ்த்தி என்றும்
நிலைத்திருப்பேன், திருவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவன் சக்தியினைச் – செய்ய
　　மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்
பாதுமிவ் வறுமையெலாம் — எந்தப்
　　போதிலுஞ் சிறுமையின் புகைதனிலே
வேதனைப் படுமனமும் — உயர்
　　வேதமும் வெறுப்புறச் சோர்மதியும்
வாதனை பொறுக்கவில்லை — அன்னை
　　மாமகளடியிணை சரண் புகுவோம்.

— பாரதியார்.

---

## சகல கலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
　　தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
　　லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தாள்பித்
　　தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
　　சகல கலாவல்லியே. (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
　　தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
　　வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
　　கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
　　சகல கலாவல்லியே. (2)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
　　தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
　　லோவுளங் கொண்டு தெள்ளித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே. (3)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. (4)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செங்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. (5)

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. (6)

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்

நீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. (7)

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. (8)

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே. (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்ப்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே. (10)

— ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சரஸ்வதி துதி

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக்கலமே;

— தேசிகவிநாயகம்பிள்ளை

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பான்,
வீணைசெய்யும் ஒலியில் இருப்பாள்,
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பான்,
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்,
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் - வெள் 2

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோத கன்ற தொழிலுடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள் - வெள் 3

— பாரதியார்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய். 4

— காளமேகப்புலவர்,

## சரஸ்வதியந்தாதி

காப்பு

நேரிசை வெண்பா

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை — தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் — துடியிடையும்
அல்லும் பகலு மனவரத மூந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

நூல்

கட்டளைக் கலித்துறை

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கம லாசனத் தேவிசொற்
றூர்தந்த வென்மனத் தாமரை யாட்டி சரோருகமேற்
பார்தந்த நாத னிசை தந்த வாரணப்பங்கையத்தாள்
வார்தந்த சோதியம் போருகத் தாளை வணங்குதுமே.

வணங்குஞ் சிலைநுத லுங்கழைத் தோளும் வனமுலைமேற்
சுணங்கும் புதிய நிலவெழு மேனியுந் தோட்டுடனே
பிணங்குங் கருந்தடங் கண்களு நோக்கிப் பிரமனன்பா
லுணங்குந் திருமுன்றி லாய்மறை நான்கு முரைப்பவளே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைப்பா ருலாக்குங் கலைகளெல் லாமெண்ணி லுன்னையன்றித்
தரைப்பா லொருவர் தரவல ரோதண்டா ளமுலை
வரைப்பா லமுதுதந் திங்கெனை வாழ்வித்த மாமயிலே
விரைப்பா சடைமலர் வெண்டா மரைப்பதி மெல்லியளே. 3

இயலா னதுகொண்டு நின்றிரு நாமங்க ளேத்துதற்கு
முயலாமை யாற்றடு மாறுகின் றேனிந்த மூவுலகுஞ்
செயலா லமைத்த கலைமக ளேநின் றிருவருளுக்
கயலா விடாம லடியே னையுமுவந் தாண்டருளே. 4

அருக்கோ தயத்தினுஞ் சந்திரோ தயமொத் தழகெறிக்குந்
திருக்கோ லநாயகிசெந் தமிழ்ப்பா வைதிசை முகத்தா
விருக்கோ துநாதனுந் தானுமெப் போது மினிதிருக்கு
மருக்கோ லநாண்மல ராளென்னை யாளு மடமயிலே. 5

மயிலே மடப்பிடி யேகொடி யேயிள மான்பிணையே
குயிலே பசுங்கிளி யேயன்ன மேமனக் கூரிருட்கோர்
வெயிலே நிலவெழு மேனிமின் னேயினி வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவே னுனதுபொற் பாதங்களே. 6

பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியுந் தந்தருள் பாரதி வெள்ளிதமிழ்ப்பூஞ்
சீதாம் புயத்தி லிருப்பா ளிருப்பவென் சிந்தையுள்ளே
யேதாம் பவியிற் பெறலரி தாவதெனக் கினியே. 7

இனிநா னுணர்வதெண் ணெண்கலை யாளை யிலகுதொண்டைக்
கனிநா ணுஞ் செவ்விதழ் வெண்ணிறத் தாளைக் கமலவயன்
றனிநா யகியை யகிலாண்ட மும்பெற்ற தாயைமணப்
பனிநாண் மலருறை பூவையை யாரணப் பாவையையே. 8

பாவுந் தொடையும் பதங்களுஞ் சீரும் பலவிதமான
மேவுங் கலைகள் விதிப்பா ளிடம்விதி யின்முதிய
நாவும் பகர்ந்த தொல்வேதங்க ளைஞ்சு நறுங்கமலப்
பூவுந் திருத் தம் பூவா லணிபவர் புந்தியுமே. 9

பந்தியிற் கூரிரு ணீக்கும் புதிய மதியமென்கோ
வந்தியிற் றோன்றிய தீபமென் கோகதல் லருமறையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியிற் றோன்றுந் தபனனென் கோமணித் தாமமென்கோ
வுந்தியிற் றோன்றும் பிரான் புயந்தோயு மொருத்தியையே. 10

ஒருத்தியை யொன் றுமிலாவென் மனத்தி னுவந்துதன்னை
யிருத்தியை வெண்கமலத் திருப்பாளையென் னெண்கலைதோய்
கருத்தியை யைம்புலனுங் கலங்காமற் கருத்தையெல்லாந்
திருத்தியை யான்மறவேன் றிசை நான்முகன் றேவியையே. 11

தேவருந் தெய்வப் பெருமானு நான்மறை செப்புகின்ற
மூவருந் தானவ ராகியுள் ளோரு முனிவரரும்
யாவரு மேனைய வெல்லா வுயிரு மிதழ்வெளுத்த
பூவரு மாதி னருள்கொண்டு ஞானம் புரிகின்றதே. 12

புரிகின்ற சிந்தையி னூடே புகுந்து புகுந்திருளை
யரிகின்ற தாய்கின்ற வெல்லா வறிவின ரும்பொருளைத்
தெரிகின்ற வின்பங் கனிந்தூறி நெஞ்சந் தெளிந்துமுற்ற
விரிகின்ற தெண்ணெண் கலைமா துணர்த்திய வேதமுமே. 13

வேதமும் வேதத்தி னந்தமு மந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும் பேதத்தின் மார்க்கமு மார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும் போத வுருவாகி யெங்கும் பொதிந்தவிந்து
நாதமு நாதவண் டார்க்கும்வெண் டாமரை நாயகியே. 14

நாயக மான மலரக மாவது ஞானவின்பச்
சேயக மான மலரக மாவதுந் தீவினையா
லேயக மாறி விடுமக மாவது மெவ்வுயிர்க்குந்
தாயக மாவதுந் தாதார் சுவேத சரோருகமே. 15

சரோருக மேதிருக் கோயிலுங் கைகளுந் தாளிணையு
முரோருக முந்திரு வல்குலு நாபியு மோங்கிருள்போற்
சிரோருகஞ் சூழ்ந்த வதனமு நாட்டமுஞ் சேயிதழு
மொரோருக மீரரை மாத்திரை யான வுரைமகட்கே. 16

கருந்தா மரைமலர் கட்டா மரைமலர் காமருதா
ளருந்தா மரைமலர் செந்தா மரைமலர் தாவிலெழிற்
றருந்தா மரைமலர் வெண்டா மரைமலர் தாவிலெழிற்
பெருந்தா மரைமணக் குங்கலைக் கூட்டப் பிணைதனக்கே. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கே துணிபொரு ளென்னுந்தொல் வேதஞ்சதுர்முகத்தோ
னெனக்கே சமைந்த வபிடேக மென்னு மிமையவர்தா
மனக்கேத மாற்று மருந்தென்ப சூடு மலரென்பன்யான்
கனக்கேச பந்திக் கலைமங்கை பாத கமலங்களே. 18

கமலந் தனிலிருப் பாள்விருப் போடங் கரங்குவித்துக்
கமலங் கடவுளர் போற்றுமென் பூவைகண் ணிற்கருணைக்
கமலந் தனைக்கொண்டு கண்டொருகாற்றங் கருத்துள்வைப்பார்
கமலங் கழிக்குங் கலையங்கை யாரணி காரணியே. 19

காரணன் பாகமுஞ் சென்னியுஞ் சேர்தரு கன்னியரு
நாரணனுக மகலாத திருவுமோர் நான்மருப்பு
வாரணன் றேவியு மற்றுள்ள தெய்வ மடந்தையரு
மாரணப் பாவை பணித்தகுற் றேவ லடியவரே. 20

அடிவேத நாறுஞ் சிறப்பார்ந்த வேத மனைத்தினுக்கு
முடிவே தவள முளரிமின் னேமுடி யவிரத்தின
வடிவே மகிழ்ந்து பணிவார் தமது மயலிரவின்
விடிவே யறிந்தென்னை யாழ்வார் தலந்தனில் வேறிலையே. 25

வேறிலை யென்று னடியாரிற் கூடி விளங்குநின்பேர்
கூறலை யானுங் குறித்துநின் றேனைம் புலக்குறும்பா
மாறிலை கள்வர் மயக்காம னின்மலாத் தாணெறியிற்
சேறலை யிந்தருள வெண்டா மரைமலர்ச் சேயிழையே. 22

சேதிக் கலாந்தர்க்க மார்க்கங்க ளெவ்வெவர் சிந்தனையுஞ்
சோதிக்க லாமுறப் போதிக்கலாஞ் சொன்னதே துணிந்து
சாதிக்க லாமிகப் பேதிக்க லாமுத்தி தானெய்தலா
மாதிக்க லாமயில் வல்லிபொற்றுனை யடைந்தவர்க்கே. 23

அடையாள நாண்மல ரங்கையி லேடு மணிவடமு
முடையாளை நுண்ணிடை யொன்றுமி லாளை யுபநிடதம்
படையாளை யெவ்வுயிரும் படைப் பாளைப் பதுமநறுந்
தொடையாளை யல்லது மற்றினியாரைத் தொழுவவே. 24

தொழுவார் வலம்வரு வார்துதிப் பார்தந் தொழின் மறந்து
விழுவா ரருமறை மெய்தெரி வாரின்ப மெய்புளகித்
தழுவா ரினுங்கண்ணி னீர்மல்கு வாரென்க ணுவதென்னை
வழுவாத செஞ்சொற் கலைமங்கை பாலன்பு வைத்தவரே. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கும் பொருளு மில்வாழ்க்கைப் பொருளுமற்றைப் பொருளும்
பொய்க்கும் பொருளன்றி நீடும் பொருளல்ல பூதலத்தின்
மெய்க்கும் பொருளு மழியாப் பொருளும் விழுப்பொருளு
முய்க்கும் பொருளுங் கலைமக ளுணர்த்து முரைப்பொருளே. 26

பொருளா லிரண்டும் பெறலாகு மென்ற பொருள் பொருளோ
மருளாத சொற்கலை வான்பொரு ளோபொருள் வந்துவந்தித்
தருளாய் விளங்கு மவர்க்கொழி யாயறி யாதவருக்
கிருளாய் விளங்கு நலங்கிளர் மேனி யிலங்கிழையே. 27

இலங்குந் திருமுக மெய்யிற் புளக மெழுங்கண்கணீர்
மலங்கும் பழுதற்ற வாக்கும் பலிக்கு மனமிகவே
துலங்கு முறுவல் செயக்களி கூருஞ் சுழல் புனல்போற்
கலங்கும் பொழுது தெளியுஞ்சொன் மானைக்கருதினர்க்கே. 28

கரியா ரளகமுங் கண்ணுங் கதிர்முலைக் கண்ணுஞ் செய்ய
சரியார் கரமும் பதமு மிதழுந் தவளநறும்
புரியார்ந்த தாமரை யுந்திரு மேனியும் பூண்பணவும்
பிரியாதென் னெஞ்சினு நாவினு நிற்கும் பெருந்திருவே. 29

பெருந்திரு வுஞ்சய மங்கையு மாகியு மாகியென் பேதைநெஞ்சி
லிருந்தருளுஞ் செஞ்சொல் வஞ்சியைப் போற்றினொல்லா வுயிர்க்கும்
பொருந்திய ஞானந் தருமின்ப வேதப் பொருளுந்தருந்
திருந்திய செல்வந் தருமழி யாப்பெருஞ் சீர்தருமே. 30

— மகாகவி கம்பர்.

# சரஸ்வதி சிந்தனை

புத்தகத் துள்ளுறை மாதே
பூவிலமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடையாளே
மூவுலகுந் தொழு தேவி
செப்புக வித்தன் முலையாய்
செவ்வரி யோடிய கண்ணுய்
முத்து நிறைந்த வெண்பல்லாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருக்கம் பூமேனி நிறத்தாளே
தக்கோலந் தின்ற துவர்வாயே
சரஸ்வதி என்னும் திருவே
எக்காலு முன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணிவைப்பாய்
ஆக்காயெம் பெருமாட்டி
அழகிய பூவணை மீதே
நோக்கா யென் மிடிதீர
நொடிக்கும் பிராமணத்தி நோக்காயே
சாலி நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூஜை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பி
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமோஸ்து
ஞானக் கொழுந்தே நமோஸ்து
கல்விக் கரசே நமோஸ்து
கணக்கறி தேவீ நமோஸ்து
சொல்லும் பொருளே நமோஸ்து
சூட்சுமச் சொரூபி நமோஸ்து.

---

## நாமாவளிகள்

சரஸ்வதி சரஸ்வதி! சௌபாக்கிய தாயினி சரஸ்வதி!!
சரஸ்வதி சரஸ்வதி! சகல கலாகாணி சரஸ்வதி!!
சரஸ்வதி சரஸ்வதி! கலையெல்லாம் தருவாய் சரஸ்வதி!!
சரஸ்வதி சரஸ்வதி! நலமெல்லாம் அருள்வாய் சரஸ்வதி!!

தஞ்சமென்றே வந்தேன் சரஸ்வதியே – எந்தன்
தாயே தருணம் வா சரஸ்வதியே
நெஞ்ச முருகிப்பாட சரஸ்வதியே
நாவிலே நர்த்தனம் செய் சரஸ்வதியே
வெள்ளைத் தாமரை வாழும் சரஸ்வதியே – எந்தன்
உள்ளங் குழையப் பாட அருள் தருவாய்
கள்ளங் கபடொழித்துக் கொஞ்சித் தமிழில் – தாயைக்
கண்டு களிக்கப் பாட்டுப் பாடவைம்மா.

அம்பா பரமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி
ஆதி பராசக்தி பாலயமாம்
அம்பா பரமேஸ்வரி தேவி மகேஸ்வரி
அன்ன பூர்ணேஸ்வரி ஆண்டருள்வாய்
அம்பா பரமேஸ்வரி ஸ்ரீ புவனேஸ்வரி
ஸ்ரீலலிதேஸ்வரி பாலயமாம்
அம்பா பரமேஸ்வரி ராஜராஜேஸ்வரி
ஆனந்த ரூபிணி ஆண்டருள்வாய்.

மலரைப் பிரியா மணம் போலே
மதியைப் பிரியா குளிர்போலே
கடலைப் பிரியா அலைபோலே
கதிரைப் பிரியா ஒளி போலே
கன்னிப் பிரியா உமையாளே
கருணை நிறைந்த விழியாளே
உன்னைப் பிரியா வகையானே
உலகில் வாழப் பெறுவேனே!

கேட்ப தெல்லா முன்பாட்டாய்
நாட்ட மெல்லாம் உன்பாலாய்
ஓட்டை வாயு மூமையாய்
உலகில் வாழப் பெறுவேனே
ஆட்டி உலகைப் பார்ப்பாளே
அடிமை யுன்றன் சேயன்றோ
கட்டி என்னை அணைத்துந்தன்
கருணை நிலையைக் காட்டம்மா.

எங்கு முன்னைக் கண்டென்னுள்ளே
என்னைத் துறந்து வாழ்வேனே
சங்கடமின்றி எனை நீ விழுங்கி
தானே தானய் மகிழ்வேனே
பங்கயத்தாளும் கலையாளும்
பரிவாய்ப் பணியும் அழகாளே
மங்கள மங்கள மெங்கும் பொங்கிட
மகாசக்தி நீ அருள்வாய்!

UNIVERSITY ★ LIBRARY ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்த சக்தி அடைக்கலம்

## கலிவெண்பா

தொண்டர் நாதன் துணைவி பராசக்தி
கண்ட கண்கள் களிக்கு மனோன்மணி
கொண்ட நெஞ்சங் குளிரு மருட்சிவை
வண்டு வார்குழ லம்மையை வாழ்த்துவாம்!

## வேறு

ஓம்சுத்த சக்தி. ஓம்சிவ சக்தி
ஓம்பர தேவி உன்னடி பணிந்தேன்;
உன்னை யன்றிப் பின்னொரு துணையிலேன்
அன்னை, அன்னை, என்முகம் பாராய்
உறுதி யாக உன்னையே நம்பினேன்
வருதி யென்றொரு வார்த்தை சொல்லாயோ?
பெற்றவள் வெறுத்தாற் பிள்ளையென் செய்வேன்?
கற்றவர் போற்றுங் கனியே, தேனே
கல்வி யறிவிலேன், காட்சியு மில்லேன்
செல்வப் பெருக்கிலேன் சிந்தையி லுன்னை
அன்புடன் கூவும் ஆர்வமே கொண்டேன்
பண்புட னென்னைப் பரிந்தாட் கொள்வாய்
இல்லற மாகிய நல்லறத் திருந்தே
வல்லபி யுன்னை வழுத்துவோர் வாழ்கவே.
உன்னடி பற்றி உலகினில் வாழ்வேன்
இன்னடி யாரின் இணையிலாத் துணையே
கண்டதே காட்சி, கொண்டதே கோலம்
என்றலை மனதை இழுத்துள் ளடக்கி
ஐம்புலச் சேட்டைகள் அறவே நீங்கிப்
பைம்புல னுலவும் பசுங்காற் றெனவே
சுதந்திர மாகவுன் பதமலர் பற்றி
இதந்தரு தமிழால் இசைந்துனை நாளும்
கவலையை வெல்லுங் களிப்பெனக் கருளாய்.
திவலையும் உறுதி நிலையும் தருவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தி லின்பமே மல்கிட வருளாய்
தனகனஞ் சுற்றம் மனைமகா ரெல்லாம்
உனதென மதிக்கும் உளமெனக் கருளாய்
வறுமை யின்றி வளமிகத் தருவாய்
நறுமண மலரின் நகையெனக் கருளாய்
உண்மையே பேசும் உரையெனக் கருளாய்
வண்மையே பெருகும் வளமெனக் கருளாய்
பிள்ளைச் செல்வம் பெருகிட வருளாய்
வள்ளற் கையால் வரமிகத் தருவாய்
கற்புள மனைவி களிப்புற வருளாய்
நற்புக ழோங்கும் நாவுக் கரசுபோல்
பத்தியும், பணியும், பைந்தமிழ் வாக்கும்
சித்த சுத்தியும், சிவக்கன லொளியும்,
தருவாய்; உனது தாளை நினைத்ததும்
வருவாய் வருவாய் வரதாம் பிகையே!
அன்பர் கேட்டதை அக்கண மளிக்கும்
அன்பே; அருளே அறிவுச் சுடரே,
பெயரைக் கேட்டதும் துயர்கள் விலகும்,
உயரும் சீர்த்தி, உலகும் வணங்கும்;
அம்மையே வாழ்வின் அமுதமே போற்றி
இம்மைச் சுகங்கள் ஈவாய் போற்றி
பொய்யறு புகழும், பொலிவு மறிவும்
செய்யகற் சிந்தையும், தியான சித்தியும்
அன்பர் அன்பும் அன்புப் பணியும்
விமலர் தொண்டும், வித்தகர் நட்பும்
அஞ்சா நெஞ்சும் ஆத்தும சக்தியும்
துஞ்சா முயற்சியும் தோன்றாத் துணையும்
வெற்றியுந் திருவும் வீரத் தணலும்
பெற்றுநான் வாழும் பெருமை யருளாய்
பகைவர் நடுங்கும் பலமெனக் கருளாய்
தகைபெருஞ் சுத்த தரும சக்தியே
மலைபோ லெனக்குக் கலைவள மளிப்பாய்
அலைகடல் போலே ஆழ்ந்த நல்லறிவும்
பிணியிலா வுடலும் பிறகிடாத் துணிவும்
அணியழ கோங்கும் ஆத்தும நேயமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியார் என்முன் குமையும் சக்தியும்
அடியார் மகிழும் அருட்பணித் திறனும்
பொருளும், புவியும், போகமும், போதமும்
அருளும். ஆயுளும் ஆர்வமுந் தருவாய்
அம்மைப் பயனை இம்மையி லளிப்பாய்
அம்மையே அமரத் தன்மை யளிப்பாய்
எண்ணிய தெய்தந் திண்மன மளிப்பாய்
புண்ணியம் பெருகும் கண்ணிய மளிப்பாய்
கண்பார்த் தென்னைக் கைதூக்கி விட்டுப்
பண்புடன் காவாய் பகவதி தாயே!

சரணம் சரணம் சதாசிவ சக்தி
சரணம் சரணம் சத்குரு தேவி
சுத்த சக்தி ஓம், சுத்த சக்தி ஓம்
சுத்த சக்தி ஓம் சுத்த சக்தி ஓம்!

விருத்தம்

பூவெலாம் படைத்த பூதநா யகியே
புகலடை புண்ணியர் தமக்குக்
காவலாய் நிற்குங் கருணை நாயகியே
கண்கருத் துயிருட லினிக்கத்
தேவர்கொண் டாடுஞ் சித்திநா யகியே,
சிவந்தரு சக்திநா யகியே,
ஆவலாய் உன்னைக் கூவினேன், பணிந்தேன்,
அடியனுக் கருள்புரி வாயே!

---

## ஜய ஜய சக்தி

ஜயஜய சுத்தசக்தி
சரண்பர மாத்மஜோதி!
பயந்தவிர்; பகைதீர்; ஆத்ம
பலமருள்; பழுத்த வாக்கு
நயந்தருள்; யோகசித்தி
நன்றருள் ஞாலவெற்றி
வியன்கலை நல்கு; நீயே
நாள்ளனும் விறு தாராய்!

University of Jaffna
188873
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைமனம் அடங்கிச் சீறும்
 ஆணவப் பேயடங்கி,
மலையென நிட்டை கூடி
 வானென வாழ்ந்து தெய்வக்
கலைமதி யெனவுலாவுங்
 களிப்பெமக் கீவாய்; உள்ளே
நிலைபெறும் அன்பருக்கு
 நின்னையே நல்கும் எந்தாய்!

படிகம்போல் மேனிகண்டேன்
 பால்வண்ணங் கண்டேன்; உள்ளம்
படிகக்கண் ணாடியாகிப்
 பளிச்செனு ஒளிரக் கண்டேன்
அடிமுடி காணாத் தூய
 அறிவினைக் கண்டேன் இன்பந்
துடிநடங் கண்டேன் சுத்த
 ஜோதியின் அருளைக் கண்டேன்!

ஓங்காரக் கண்ணாடிமுன்
 ஒளிமணி விளக்கிலங்க
நீங்காத நிட்டைகூடி
 நெஞ்சிலே நீயிலங்க
ஆங்கார மில்லாநானுன்
 அன்பிலே ஆழ்ந்திலங்க,
தூங்காத தூக்கந் தந்தாய்
 சுத்தஓம் சக்திதாயே!

பகைவரின் பலமொடுங்கப்
 பாழ்சின வசையடங்க
நகைப்பவர் வாயடங்க
 நானெனும் செருக்கடங்கத்
தகைமிகுங் கவிதைச்செல்வம்
 தழைத்திட வரமளித்தாய்
வகைவகைச் சந்தத்தாலுன்
 மகிமையைப் பாடவாராய்!

எனதுளத் துடிப்புநீயே
 என் னுள்யான் எனதுநீயே
உனதருட் கருணையின்றி
 யுயிரிலேன் உயிர்ப்பு மில்லேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதினைக் கடந்த ஞான
வானிலே நடனமாடு
புனிதமே என்னுள்ளத்தைப்
புண்ணியக் கோயில் கொள்ளாய்!

ஆரறி வாருன் மாண்பை
அற்புதச் சிற்ப ராம்பா!
பாரறி விளக்கே பந்த
பாசத்தை யுருவி யோங்கும்
சீரறி யிரவியே நின்
சித்தமே யாக வென்னும்
தாரக மொன்றே பற்றிச்
சரண்புகும் என்னைக் காவாய்!

கலைதரு மறிவே ஞானக்
கண்மணிக் கொளியே; மாய
வலைதரும் தீமை நாடா
மனந்தெளி வருளி, அன்பு
நிலைதரும் அருளே, ஆன்ம
நேயமே மூலாதார
வுலைதருங் கனலே என்னை
உய்யக்கொண் டாளுவாயே!

தொன்றுநான் மறைக ளீந்தாய்,
துலங்குமா கமங்க ளீந்தாய்,
நன்றுயிர் வாழ நான்கும்
வளம்பெற நல்கு கின்றாய்
வென்றுயர் கவிதை யீந்து
வீரமும் வீறு மீந்தே
என்றுமென் இதய மன்றில்
இருந்துல காளு வாயே!

வாழ்கநின் அன்பர் கூட்டம்
வழிவழி நின்போர் வாழ்க!
வாழ்கநின் யோக சித்தர்
மரபுநீ டூழி யிங்கே.......
வாழ்கநின் அறிவுச் செல்வம்
வரந்தருந் திருக்கை வண்மை
சூழ்கவும் சுத்த சக்திச்
சுடர்நில வுலக மெல்லாம்!

———

188873
UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகத்தில் மணிபாகவதர் அவர்கள்

30-8-65 நோட்டன் பிறிட்ஜ் விநாயகராலயத்தில் ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டுக் கதாகாலக்ஷேபம்.

31-8-65 மஸ்கேலியா ஷண்முகநாதர் ஆலயத்தில் கதாகாலக்ஷேபம்.

1-9-65 டிக்கோயாவில் கதாகாலக்ஷேபம்.

2-9-65 ஹட்டன் சைவமஹாசபை மண்டபத்தில் கதாகாலக்ஷேபம்.

3-9-65 தலவாக்கொல்லை முருகன் ஆலயத்தில் கதாகாலக்ஷேபம்.

4-9-65 கொத்மலைப் பகுதியில் கதாகாலக்ஷேபம்.

5-9-65 நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரிமண்டபத்தில் கதாகாலக்ஷேபம்.

6-9-65 ருகலை முருகன் கோயிலில் கதாகாலக்ஷேபம்.

---

நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

# கார்த்திகைப் பிரசங்கம்

விசுவாவசு ஸு ஆவணி மீ 31-ந் உ (16-9-65)

வியாழக்கிழமை இரவு 7-45 மணிமுதல்

## திருப்புகழ் மண்டபத்தில்

# "நக்கீரர்"

எனும் சரிதை கதாகாலக்ஷேபம் செய்யப்படும்

நிகழ்த்துபவர்

## திரு. தா. பொன்னம்பலம் அவர்கள்

(ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி)

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Donated by :- Mr. K. C. KULARATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளமுதம்

ஆத்மீக மாத வெளியீடு

" நலந்தீங்கினும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன் "

விசுவாவசு ஆவணி மீ 16-ந் உ (1—9—65)



அருளமுத சந்தா விபரம்:-

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | ரூபா | 100-00 |
| வருட ,, | ,, | 6-00 |
| தனிப்பிரதி சதம் | | -50 |

ஆசிரியர்:

முத்தமிழ்மணி சி. எஸ். எஸ். மணிபாகவதர்

" அருளமுதம் " காரியாலயம்
கந்தகோட்டம்,
179, கோவில் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
இலங்கை. (Ceylon)

இச்சஞ்சிகை நல்லூர் கந்தகோட்டம், 179, இலக்கத்திலிருக்கும் வண்ணை, ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்களால் யாழ்ப்பாணம், ஸ்ரீ காந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org